சொற்பொழிவுகள்

காருண்ய ஜோதி நாகூர் சையது அப்துல் காதிர் ஷாகுல் ஹமீது பாதுஷா நாயகம் அவர்கள் இந்தியாவிலும் வெளிநாடு களிலும் ஆற்றிய சொற்பொழிவுகள்.

அஜ்மீர் சரீஃபில் ஆற்றிய சொற்பொழிவு

அன்பர்களே!

அவ்வலு தீனி மஹ்ரிபத்தில்லாஹி என்று எம்பெருமான் முஹம்மத் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள். மஹ்ரிபத்துல்லாஹி என்பது. ஷரீஅத், தரீக்கத், ஹகீகத் என்ற மூன்று நிலைகளை கடந்து வந்து இறைவனைப் பற்றிய மெய்யறிவை உணர்ந்து, அறிந்து அதில் தரப்படுகின்ற நிலை என்பதை நீங்களெல்லாம் அறிந்திருப்பீர்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தீனுடைய பாதையில் முதல் காரியம் இறைவனைப் பற்றிய ஞானத்தை அடைவது என்று கூறிய பிறகும், இறைவனைப் பற்றிய ஞானம் தேவையில்லை, அவனுடைய கட்டளைகள், ஏவல், விலக்கல்களை ஏற்று நடந்தால் போதுமானது என்று கருதுகின்றவர்களோடு சேர்ந்து விடாதீர்கள்.

நாடெங்கும் மெய்ஞ்ஞானம் என்கின்ற மஹ்ரிபா தேவையில்லை என்ற மௌட்டீகம் வளர்ந்து வருகிறது. ஷெய்குல் மஷாயிகு சையிதினா முகம்மது கவுது குவாலீரி நாயகம் அவர்களுக்கே ஃபத்வா கொடுக்கின்ற அளவுக்கு அகிதாவில் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது.

அவர்கள் மிஃராஜ்நாமா என்கின்ற அற்புதமான ஞான விளக்கத்தை தாங்கள் ஃபனா நிலையில் இருந்தபோது வெளிப் படுத்தினார்கள். அதில் மெய்ப்பொருளைப் பற்றிய இரகசியங்கள் முத்துக்கள், வைர, வைடூரியங்களைப்போல இறைந்து கிடக்கின்றன.

ஷெய்குனா அவர்களுடைய மாட்சிமையும், உயர்வையும் அறியாதவர்கள் மிஃராஜு நாமாவுக்கு ஆட்சேபணை தெரிவித்து, அம்மகோன்னதமான மகானுக்கு மரண தண்டனை வழங்கி தீர்ப்பு எழுதியிருக்கிறார்கள். தீர்ப்பு வழங்கியவர்களும் அதனை ஆதரிக்கும் அரசும் வெகு சீக்கிரத்தில் சத்தியத்தை சந்திப்பார்கள். ஆட்சி யாருக்குரியதோ அவர்கள் மீண்டும் அதிகாரத்தில் அமர்த்தப்படுவார்கள்.

ஏனெனில் அல்லாஹ்வின் மீது அன்பு கொள்வது என்பதே மார்க்கத்தின் சாரமாகவும், மனித வாழ்க்கையின் இலட்சியமாகவும் இருக்கிறது. அல்லாஹ்வின் மீது அன்பு கொள்வது என்பது அவ்வளவு சாத்தியமானதா? அவனோ அரூபி! அரூபியான அவனை நேசிப்ப தென்பது எப்படி? அன்பர்களே! நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

நமக்கு தெரியாத ஒன்றின் மீது, நம் அனுபவத்தில் அறிந்திராத ஒன்றின் மீது அன்பு கொள்வதென்பது எவ்வாறு சாத்தியமாகும். அல்லாஹ்வைப் பற்றிய அறிவு நமக்கிருந்தாலன்றி அவன் மீது நாம் கொள்கின்ற நேசம் முழுமை பெறமுடியாது என்பதால்தான் எம்பெருமான் (ஸல்) அவர்கள் 'அவ்வலு தீனி மஃரிபத்தில்லாஹி' - என்று தெளிவுறக் கூறியுள்ளார்கள்.

அல்லாஹ்வைப் பற்றிய அறிவு அல்லது ஞானம் எங்கு கிடைக்கும் அதை எப்படி அடைவது என்ற கவலை ஒருவனுக்கு ஏற்படுமேயானால், அவன் கவலையின் அளவுக்கேற்ப தேட்டமும், அவனது தேட்டத்தின் அளவுக்கேற்ப அவனுக்கு ஞானமும் கிடைக்கிறது.

வ அன்லய்ஸனில் இன்ஸானி இல்லா மாஸாஅ! எதற்காக ஒரு மனிதன் முயற்சி செய்கிறானோ அதனையே அவன் அடைந்துக் கொள்வான் - என்று திருமறையிலே இறைவன் கூறுகிறான். எனவே, ஒருவனுடைய தேட்டத்தின் அளவைப் பொறுத்துத்தான் அவனுடைய ஞானமும் பெருகும்.

இறைவனை அறிவதற்கு அவனை எங்கே தேடுவது என்று உங்கள் மனதில் எழுகின்ற குரல் எனக்கு கேட்கவே செய்கிறது. அதற்கும் அப்புனித மறையிலேயே பதிலிருக்கிறது. வஃபி அன்ஃபுஸீகும் அஃபலா துப்ஸிரூன்! நான் உங்கள் ரூஹ் என்னும் ஆன்மாவினுள் இருக்கிறேன்! ஆனாலும் நீங்கள் என்னை கவனிப்பதில்லை! என்று இறைவன் தெளிவுபடுத்தி இருக்கிறான். அந்தமகோன்னதமான அல்லாஹ் ஜல்ல ஜலாலஹு, உன்னுடைய ஆன்மாவை, இதயத்தை, அகத்தை தன்னுடைய இருப்பிடமாக கொண்டிருக்கிறான் என்பதை அறிந்துக்கொள்வதே உனக்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? ஆனால் இது சத்தியத்திலும் சத்தியமான ஒன்றாகும். எனவேதான் எம்பெருமான் முஹம்மது (ஸல்) அவர்கள்.

'மன் அரப நப்ஸஹு ஃபகத் அரப ரப்பஹு' - எவன் தன் நப்ஸ் எனும் அகத்தை அறிந்தானோ அவன் தன் நாயனை அறிந்தான் என்று கூறினார்கள்.

தன் நப்ஸு என்ற தன் அகத்தை அறிவதெப்படி என்று ஆராய்ந்துப் பாருங்கள். மனிதனின் தான் என்பது யதார்த்தத்தில் அவனது உடல் அல்ல; அவனது மனமேயாகும். மனிதன் தன் கண்ணால் பார்க்கிறான், காதால் கேட்கிறான், நாசியால் நுகர்கிறான், நாவால் சுவைக்கிறான், அவனது உடலால் இன்புறுகிறான். அனால் அந்த மனிதன் தன் கண்ணால் கேட்கவோ, காதால் பார்க்கவோ, முடியாது. அந்தந்தந்த

உறுப்புகள் அவைகளுக்குரிய குறிப்பிட்ட காரியங்களைத்தான் செய்ய முடிகிறது. உடலிலுள்ள இந்த உறுப்புகளுக்கெல்லாம் ஆதாரமாக எது இருக்கிறது என்று சிந்தித்துப் பாருங்கள். அது அவனது புத்தி அல்லது அறிவு அல்லது அகம் என்பதை நீங்கள் உணர முடியும். இந்த அகம்தான் நப்ஸ் என்று கூறப்படுகிறது.

இந்த அகம்தான் மனிதனுடைய சகல அசைவுகளுக்கும், ஆட்டங்களுக்கும் ஆதாரமாக இருக்கிறது. ஒரு மனிதன் தன் கண்களை மூடிக்கொண்டு, காதுகளை அடைத்துக்கொண்டு, ஆட்டம், அசைவின்றி படுத்திருந்தாலும் கூட தானிருப்பதை உணர்கிறான். இவ்வாறு எது உணரப்படுகிறதோ அதுதான் மனிதனுடைய அகமாக இருக்கிறது. இவ்வகத்தின் ஒரு பக்கத்தில் உன்னுடைய ஆன்மாவென்னும் ரூஹ் இருக்கிறது. மறுபுறத்திலோ உடலின் ஐம்புலன்களாலும் அது இழுத்துச் செல்லப்படுகிறது.

உன்னுடைய நப்ஸ் என்னும் அகமானது ஐம்புலன்களின் நுகர்ச்சியிலே இன்பத்தைக் காண்கிறது. ஆனால் புலன்களின் வழியாக அது அடையும் இன்பங்களும், சுகானுபவங்களும் நிலைத்திருப்பதில்லை. அகம் நிம்மதியையும், மகிழ்ச்சியையும் தேடி புலன்களின் வழியாக இப்பூமியின் மீது பாய்கிறது. ஆனால் இங்கு அந்த அகத்துக்கு கிடைக்கும் சுகமோ கானல் நீரைப் போலவும், தோன்றி மறையும் மின்னலைப் போலவும், உயரே எழுந்து, தாழ்ந்து விழும் கடலலைப் போலவும், அற்பநேர அனுபவமாகவே அமைந்துவிடுகிறது. எனவே, அகம் துக்கப்படுகிறது. இப்பூமி அதன் அனுபவத்துக்கு துக்கமயமாகவே காணப்படுகிறது.

ஆனால் இந்த அகம் என்ற நப்ஸ் தனது நிம்மதியும் மகிழ்ச்சியும் மறுபுறத்திலுள்ள ஆன்மாவினுள்ளிருக்கும் அல்லாஹ்விடமே இருக்கிறது என உணருமானால் தன் நாட்ட தேட்டங்களை அல்லாஹ்வின் புறமாக திருப்பி அவனை அடைய முயலும். இம்முயற்சியை தான் மெய்யடியார்கள் சத் முயற்சி என்று கூறுகிறார்கள். அன்பர்களே இந்த சத் முயற்சியைக் குறித்தே எம்பெருமான் முஹம்மத் (ஸல்) அவர்கள் தஃபுக் யுத்தக் களத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்த வேளையில், 'சிறிய யுத்தத்திலிருந்து பெரிய யுத்தத்திற்கு மீள்கிறோம்' என்று கூறினார்கள்.

மேலும் நபிகள் நாதர் (ஸல்) அவர்கள், 'தன்னுடைய நாயனின் சந்திப்பிலேயன்றி மூஃமினுக்கு வேறெதிலும் சந்தோஷமும், நிம்மதியுமில்லை'' என்றும் கூறியிருக்கிறார்கள். சற்குருநாதர் கௌதுல் அஃலம் (ரலி) அவர்களோ, 'ஒரு மூஃமினானவனின் வெளிரங்க

வாழ்வு இரணத்திற்குரிய சம்பாத்திய முயற்சிகளில் ஈடுபட்டதாய் இருக்கும்போது அவன் இதயமும் அகமும் தனது இறைவனின் நெருங்குதலில் அமைதியும், அடக்கமும் பெற்றிருக்கும்'' என்று கூறியுள்ளார்கள்.

இறைவனை அடைவதிலும் இறைவனைப் பற்றிய ஞானத்தை அடைவதிலும் நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் எம்பெருமான் (ஸல்) அவர்களின் ஹதீஸில் ஒன்றை நீங்கள் பின்பற்றக் கடமைப் பட்டிருக்கிறீர்கள். ''ஒவ்வொரு விஷயத்திலும் சிலருக்கு இறைவன் நிபுணத்துவத்தைக் கொடுத்திருக்கிறான். எதனை தேடுகிறீர்களோ அதனை உடையவர்களிடம் அதைத் தேடுங்கள்' என்பதாக அவர்கள் கூறியுள்ளார்கள். இறைவனைப் பற்றிய ஞானத்தை அடைய வேண்டுமானால், அவனுடைய பாதையில் முன்னோடிச் சென்றுள்ள நாதாக்களையும், நல்லடியார்களையும் தேடியடைவதுதான் உங்களுக்கு சரியான பாதையாகும்.

திருமறையின் ஆரம்பத்திலுள்ள ஃபாத்திஹா சூராவிலே, 'இஹ்தினஸ் ஸிராத்தில் முஸ்தகீம் ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம்' என்று கூறப்படுவதைக் கூட நீங்கள் நோட்டமிட வேண்டாமா? 'யாருக்கு நீ நேர்வழிகாட்டினாயோ அத்தகையோர் சென்ற பாதையில் எங்களை நடத்தாட்டு' என்று கேட்கும் கோரிக்கையிலேயே அவன் தனது பாதையில் முன்னோடிகளான அடியார்களைக் குறிப்பிட்டுக் காட்டுவதை நாம் கவனிக்க வேண்டாமா? அந்த நல்லடியார்கள் யார்?

அன்பர்களே! அந்த நல்லடியார்கள் பொருட்டால்தான் உலகம் தனது பாதையிலே பிறழாது சுழன்று வருகிறது. அவர்களுக்காகவே வானம் பொழிந்து பூமி விளைகிறது. அவர்களின் பொருட்டே மனித சமுதாயம் முழுமையும் ரப்பினால் இரட்சித்துப் பாதுகாக்கப் படுகிறது. இறை தூதர்களின், நபிமார்களின் வாரிசுகளான அம்மெய்யடியார்கள் பாலைவனத்திடையே பசுஞ்சோலைகளைப் போல், மனித சமுதாயத்தில் எங்கோ ஒவ்வோரிடங்களில் காணக்கிடக்கிறார்கள். அல்லாஹ்வின் போர்வையினுள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் அவர்களை நீ கண்டுகொள்வது கூட அரிதானதுதான். அவர்களைக் குறித்தே இறைவன் தன் திருமறையில், 'அலா இன்ன அவுவியா அல்லாஹ் லாஹவ்ஃபுன் அலைஹிம் வலா யஹ்ஜனுன்' - இறைவனுடைய அவுலியாக்கள் சந்தேகமும் அச்சமுமற்றவர்கள் என கூறியுள்ளான்.

மெய்யன்பர்களே! துறவரசர் சுல்தான் இபுறாஹீமிப்னு அத்ஹம் அவர்களின் வரலாற்றில் ஒரு சம்பவத்தை கவனியுங்கள். கொஞ்ச காலமாக இறைவனைப் பற்றிய சிந்தனைகள் அவர்களுடைய

இதயத்தில் அதிகமாகிவிட்டிருந்தது. அல்லாஹ்வை அடையும் வழியென்ன. வகையென்ன? என்று தங்கள் அகத்தினுள்ளேயே உசாவிக் கொண்டிருப்பதும் அதிகமாகி வந்தது. இந்த நிலையில், ஒரு நாள் பிற்பகலில் அவர்கள் தங்கள் அரண்மனை அந்தபுரத்திலுள்ள சப்ர மஞ்சத்தில் சாய்ந்தவாறு சிந்தனை செய்துக்கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வை பற்றிய அவர்கள் சிந்தனை அதிகரித்து கவலை மேலிட்டிருந்த அந்நேரத்தில், தாங்கள் படுத்திருந்த அறையின் மேல்தளத்தில் யாரோ ஓடுவது போன்ற சப்தமெழவே வெளியில் எழுந்து வந்து யாரது? என்று சப்தமிட்டார்கள். அந்நேரம் மேல் தளத்திலே மெலிந்துபோன ஒரு மனிதன் நின்றிருந்தான். 'என் கழுதை காணாமற் போய்விட்டது. அதை தேடிக்கொண்டிருக்கிறேன்' என்றான். 'உன் கழுதையைத் தேட, அரண்மனையின் மேல்தளம்தானா உனக்கு கிடைத்தது?' என்று சுல்தான் கோபத்துடன் கேட்டார்கள். அந்த மெலியவனோ நகைத்தபடி, 'நீர் சர்வ வியாபியான அல்லாஹ்வைத் தேட ஆடம்பரமான உம் அரண்மனைதான் சரியான இடமென்று நினைத்திருக்கையில், அற்பமான என் கழுதையை இங்கு நான் தேடுவதில் என்ன தவறு?' என்று கேட்டுவிட்டு மறைந்து போனான். சுல்தான் இப்றாஹீமிப்னு அத்ஹம் உணர்ச்சிப் பெற்று அரியணை துறந்தார்கள்; அரண்மனையைத் துறந்தார்கள்; அரசைத் துறந்து வெளியேறி ஆண்டவனைத் தேடிச் சென்றார்கள்.

இவ்வரலாற்று சம்பவத்திலே இருக்கும் உண்மையைக் கவனியுங்கள். உலகத்தின் சுகபோக வாழ்க்கையில் மூழ்கியிருக்கும் வரை உங்களுக்கும், அல்லாஹ்வுக்கும் இடையிலுள்ள தூரம் அதிக மாகவே இருக்கும். ரப்பில் அஃலா என்னும் அதிகாரத்தில் இறைவன் ஸுஹுஃபி இப்ராஹீம் வமூஸா - ''நிச்சயமாக இவ்வுலகம் வீண் விவகாரங்களும், விளையாட்டுகளும் நிறைந்தது. இறைவனிட மிருப்பவையோ மேலானவை. இதனை நாம் முன்னுள்ள ஆகமங் களிலும், மூஸாவுக்கும், இப்றாஹீமுக்கும், அருளிய வேத நூல்களிலும் கூட குறிப்பிட்டுள்ளோம்'' என்று கூறுவதைக் கவனியுங்கள். 'சீனா விலிருப்பினும் அறிவைத் தேடிச் செல்லுங்கள்' என்ற நபிமொழியின் கட்டளையைச் சிரமேற் தாங்கி, இறைவனைப் பற்றிய அறிவைத் தேடுவதற்காக உங்கள் காலத்தை செலவிடுங்கள்.

'என்னுடைய அடியான் என்னுடைய பாதையில் ஓரடி தூரம் முன்னோக்கும்போது, அவனைத் தேடி நான் பத்தடி தூரம் எதிர் வருகிறேன்' என்று இறைவன் கூறுவதாக ஹதீஸ் குதுஸியிலே காணப்படுகிறது. உனது தேட்டந்தான் உனக்கு வெற்றியைத் தரமுடியும்.

மெய்யடியார்களே, அந்த அல்லாஹ் யார்? நாம் ஏன், எதற்காக அவனைத்தேட வேண்டும்? என்று கேட்கிறீர்கள், அந்தோ, கை சேதமே! உங்கள் இதயங்களை இவ்வுலகின் அற்ப சுகமென்னும் பாசி பிடிக்கும்படி விட்டுவிட்டீர்கள்!. உங்கள் அறிவென்னும் வாள் உலக வழக்கென்னும் உரையுள் உறங்கிக் கிடப்பதால் துரு ஏறி பயனற்றுப் போய்விட்டது. பொன்னும், மண்ணும், சிற்றின்பச் சுகமும் உங்கள் கல்பின் கண்களை குருடாக்கிவிட்டன. அந்தோ மரண வழிப்பாதையில் நடந்து நரகப் படுகுழியை நெருங்கு முன்னர் விழித்தெழுங்கள்!

உங்களின் இந்நிலமைக்காக நான் துக்கப்படுகிறேன். சர்வலோக இரட்சகனான அல்லாஹ்விடம் முறையிடுவதன்றி நான் என்ன செய்ய முடியும்! இரட்சகா உனது நல்லடியார்களின் மீது நீ இரக்கங்காட்டு! இயற்கை சுபாவ மேலீட்டால் உன்னை மறந்துக் கிடப்பதென்னும் உறக்கத்திலிருந்தும் அவர்கள் விழித்தெழும்படிச் செய்! சொந்த நல்லடியார்களுக்கு விசேஷ கிருபைச் செய்யும் ரஹீமே! உன் ஞானத்தையும், உனது சமீபத்துவமென்னும் மதுரசத்தையும் புகட்டி எங்கள் மீது கருணைக்காட்டு! இவ்வுலகின் பொய்யான மாயைகளை நாங்கள் இதய வருத்தமின்றி உணர்ந்து கொள்ளவும், உனது 'லிகா'வென்னும் தரிசனத்தில் நிலைப்பெறவும் எங்கள் மீது நீ அருள்கூர்ந்தவனாக இரு!

ஸாலிஹீன்களே! உங்கள் மனச்சுமையை விட்டு வெளியில் வாருங்கள்! இவ்வுலகைச் சுற்றிப் பாருங்கள்! 'உங்களுக்கு முன்னிருந்தோருடைய நிலை என்னவாயிற்று என்று கண்டுக்கொள்ளுங்கள்' - என்ற இறைவனுடைய அறைகூவலை ஏற்று உண்மையை அறிய முற்படுங்கள்! அவன் யார்? அவனை ஏன் தேட வேண்டும் என்று கேட்கிறீர்களே! அவன் யார்? 'ஹுவல் அவ்வலுவல் ஆகிறு, வல் ளாகிறு, வல் பாதினு' - அன்பர்களே அவனே சகலவற்றிற்கும் சொந்தமானவன்! அகிலங்களனைத்திலும் உள்ளீடானவனும், வெளியீடானவனும் அவனே! யாவுமாய், எங்குமாய், ஏகமாய், ஏகாந்தமாய் நிலைத்தவனவனே! உண்மையிலேயே நீங்கள் அறிவுடையவர்களாயிருந்தால், அவனைப் பற்றிய இவ்விளக்கமே உங்களுக்கு போதுமன்றோ,

அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்! சர்வ புகழும், புகழ்ச்சியும் அந்த ரப்பில் ஆலமீனுக்கே உரியது! ரப்பு என்ற அவன் திருநாமம் அவனது இரட்சகத் தன்மையையே குறிக்கிறது! உள்ளீடாகவும், வெளியீடாகவும் உள்ள சகல, உலகங்களும், அகிலங்களும் ரப்பானியத்தென்ற அவனது பண்பிலே அடைக்கலம் பெற்றுள்ளன. படைப்பதும்,

காப்பதும், இரட்சிப்பதும் அவனது பண்பாகவே உள்ளது. ஆக்குவதும் அழிப்பதும் அவனது ஆற்றலாகவே இருக்கிறது. 'குல்லுஷையின் ஹாலிக்கும் இல்லா வஜ்ஹஹு' - 'அவனது முகத்தையன்றி பிற யாவும் அழிந்தே போகும்' - என்ற திருவசனத்தை நீங்கள் நோட்டமிட வேண்டாமா? எனினும் அவனல்லாத யாவற்றின் மீதும் உங்கள் மனம் கவிழ்ந்துக் கிடக்கும் கை சேதத்தை என்ன சொல்வேன்!

விசுவாசிகளே! 'லா இலாஹ இல்லல்லாஹு' என்ற கலிமாவை மொழிந்து விசுவாசங் கொண்டீர்களே நீங்கள் மேற்கொண்ட விசுவாசம் இன்னதென்றாவது நீங்கள் நோட்டமிட வேண்டாமா? கலிமாவினுள் சகல விஷயங்களும் பொதிந்து கிடக்கின்றதென்பதை நீங்கள் ஏன் விளங்கிக் கொள்ளவில்லை? 'லா இலாஹ இல்லல்லாஹு' என்ற மெய் விசுவாச மொழி ஐந்து மகாம்களையுடையதாகும்!

இந்த வாக்கியத்திலே இருக்கின்ற லா என்பது நாசூத்துடைய உலகத்தைக் குறிப்பிடுகிறது. மண், நீர், காற்று, நெருப்பு என்ற நான்கு பூதங்களாலும் உருவாக்கப்பட்டுள்ளன. இப்புவியுலகையும், அதன்மீது அசைந்தும், அசையாமலும் இருக்கும் அத்தனைப் பொருள்களையும் ஒருசேரக் குறிப்பதுதான் நாசூத் என்னும் பதமாகும். இந்நான்கு பூதங்களின் சாரத்தில்தான் இன்ஸான் என்ற மனிதனும் படைக்கப்பட்டிருக்கிறான். இந்த நான்கு பூதங்களும் மனிதனின் உடலிலிருந்துக்கொண்டு தோற்றுவிக்கும் ஆசாபாசங்களைதான் நப்ஸே அம்மாரா என்று கூறுகிறார்கள். இந்த நப்ஸே அம்மாராவின் குணம் சதா உலகப்பொருள்களின் மீது இச்சைக்கொண்டு அலைவதாகும். உலக மனிதர்களில் பெரும்பாலானவர்கள் இந்த நப்ஸே அம்மாராவின் பிடியில் அகப்பட்டக் கிடக்கிறார்கள்.

கலிமாவிலுள்ள இரண்டாவது சொல்லான இலாஹ் என்பது சூக்குமவுலகைக் குறிக்கிறது. வானமென்றும், சூக்கும வெட்ட வெளியென்றும், ஆலமே மலக்கூத் என்றும், மலக்கூத்துடைய உலகமென்றும், இதனைக் குறிப்பிடுவார்கள். இந்த மலக்கூத்துடைய பண்பு நன்மைகளை ஏவுவதாகும். இவ்வாறு நன்மை ஏவும் பண்பை நப்ஸே லவ்வாமா என கூறுகிறார்கள். நன்மைகளின் பக்கமாக அவாவுறும் இந்தப் பண்பும் அதீதமடையும்போது வழி தவறிவிடும். ஆயினுமிது தன் தவறை உணர்ந்து வருந்தி திருந்தும் பண்பையும் கொண்டதாகவும் உள்ளது. மலக்கூத்துடைய தேகம் இன்ஸானுடைய உடலில் நிழலைப் போல குடிகொண்டிருக்கிறது. உறைக்குள் வைக்கப்பட்டிருக்கும் வாளுக்கு இதனை ஒப்பிடலாம். இந்த சூக்கும சடலத்தின் உதவியால்தான் ஜடமாகிய உடல் இயக்கம் பெறுகிறது.

கலிமா வாக்கியத்தின் மூன்றாவது சொல்லாகிய இல்லா என்பதை கவனியுங்கள். இது ஜபரூத்துடைய உலகத்தைக் குறிப்பிடுகிறது. இதுதான் ஆன்மாவுடைய உலகம். ஜபரூத்துடைய உலகின் நப்ஸை, நப்ஸே முத்ம இன்னா என்று கூறுவார்கள். நப்ஸே முத்மயின்னா என்பது 'லிகா அல்லாஹ்' என்னும் அல்லாஹ்வின் தரிசனத்தைப் பெறக்கூடிய பண்பை படைத்ததாகும். இது நாசூத்துடைய உலகையும், ஜபரூத்துடைய உலகையும் பொதிந்து நிற்கிறது.

அல்லாஹ் என்ற நான்காவது சொல் லாஹூத்துடைய உலகைக் குறிக்கும். இந்த நப்ஸே முல்ஹிமாவானது பேரின்ப லயிப்பில் திளைக்கக்கூடிய பண்புப் பெற்றது. எந்நேரமும் ஒளி வீசிக் கொண்டிருக்கும் இந்த நப்ஸ், இல்ஹாம் எனும் இறை உதிப்புகளின் தானமாகவும் உள்ளது. ஜபரூத்துடைய உலகின் ரூஹு போன்ற இது நாசூத்து, ஜபரூத், மலக்கூத்து ஆகிய உலகங்களை அடைய வளைந்து நிற்கிறது. இந்த தானத்தை ஹக்கீகத்தே முஹம்மதி என்றும், நூரே முஹம்மதி என்றும் கூறுவார்கள்.

'ஹூ'வென்னும் கடைசிச் சொல் ஐந்தாவது தானமாகிய ஏகத்துவ மாகிய தாத்தைக் குறிப்பிடுகிறது. இங்கே நப்ஸ் முற்றிலும் அழிந்து ஃபனவாகி தெய்வீகக் காதலில் சொக்கிவிடுவதால் இந்த தானத்தில் தெய்வீகம் மட்டுமே எஞ்சிநிற்கிறது.

மனிதனின் இவ்வுடல் 'ஆலமே இன்ஸான்' என்று கூறப்படுகிறது. இம்மனித உடலும் ஒரு உலகம்தான். இந்த உடலினுள் முன்னே குறிப்பிடப்பட்ட நாசூத்து, மலக்கூத், ஜபரூத்து, லாஹூத்து ஆகிய உலகங்களும் ஹூவுடைய தானமான ஹாஹூத்துடைய உலகும் குடி கொண்டிருக்கின்றன. மனிதன் முழு பிரபஞ்சத்தின் சாரமாகவும், அது தானாகவும் இருக்கிறான்.

'தன்னை அறிந்து வணங்குவதற்காகவே மனிதனை படைத்தேன்' என்றும்

'நான் அறியத்தக்கப் புதையலாயிருந்தேன். என்னை அறியப்பட நாடினேன்; மனிதனை படைத்தேன்' என்றும் கூறுகின்ற ஹதீஸ் குதுஸியிலுள்ள உண்மையை இப்போது சீர்தூக்கிப் பாருங்கள்.

அறிஞர்களே! சட்ட நுணுக்கங்களை மட்டும் ஆராய்வதில் கவனம் செலுத்தி காலங்கழித்து, கண்ணிருந்தும் குருடர்களாகிப் போய்விடாதீர்கள். 'காலம் நிச்சயமற்றது. நாளையெனும் பெட்டகத்தில் இருப்பதை யாரே அறிவர்' என்று குத்புர் ரப்பானி அலீ(கர்) அவர்கள் கூறுவதைக்கொண்டு உணர்ச்சிப் பெறுங்கள். அல்லாஹ்வைப் பற்றிய ஞானமாகிய மஃரிபத்துல்லாஹ்வையன்றி, மறுமையில் உங்களுடன்

எந்த அறிவும் துணைக்கு வரப்போவதில்லை - என்ற அவர்களின் வார்த்தைக்கு செவிகொடுங்கள்.

அல்லாஹ்வுடைய தாத்தாகிய தத் சொரூபம் லாஹூத்து, ஜபரூத்து, மலக்கூத்து ஆகிய கண்ணாடி கூடுகளின் வழியே நுழைந்து நாசூத்தாகிய மனித ஜடலத்தினுள் பிரதிபலிப்பதை 'இலாஹி' என்பார்கள். ஆனால், இந்த நாசூத்துடைய தேகம் அசுத்தத்தின் காரணமாக தாத்தின் பிரதிபலப்பைத் தடுத்து சிதறடித்துவிடுகிறது. இறைவனைப் பற்றி ஞானத்தைத் தேடியடைந்து, அசுத்தமென்னும் உலக மாயைகளைக் களைந்து தெய்வீக தரிசனத்தைக் கண்டவர்களே அதிர்ஷ்ட சாலிகளாவர்! அவர்களுடைய கல்பெனும் கண்ணாடியில் அல்லாஹ்வின் முகம் பிரகாசிக்கிறது. அவர்களின் மனமெனும் பாத்திரத்தில் ஹூப்புல்லாஹ் என்னும் தெய்வீகக் காதல் சுரந்து வழிகிறது. அவர்களின் உடல் சதா பேரின்ப பேரானந்தத்தில் லயித்துவிடுகிறது. அவர்களுக்கே சுப சோபனம்!

அல்லாஹ்வின் தஜல்லியைப் பெறுவதற்கென்றே கொடுக்கப்பட்ட இந்த மனித பாத்திரத்தைப் பாழாக்கி விடாதீர்கள்! மெய்யடியார்களே! அன மதீனத்துன் இல்மி வ அலிய்யுன் பாபுஹா - ''நான் ஞான மென்னும் பட்டிமாவேன். அலி அதன் வாயிலாவார்!'' என்று எம்பெருமான் நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் மொழிந்தார்களே அந்த ஞானத்தின் தலை வாயிலை நோக்கி வாருங்கள்! என்று அறைகூவி அழைக்கிறேன். அந்தோ கைசேதமே! வைர கற்களின் விலை மதிப்பை உணர்ந்தறிய முடியாத பாமரர்களாக நீங்களிருக் கின்றீர்கள். சாக்கடையைச் சுத்தப்படுத்தும் தொழிலாளி ஒருவன். அத்தரும் சந்தனமும், மலர்களும் விற்கப்படக்கூடியக் கடைத் தெருவில் நுழைந்ததும் மயங்கி விழுந்துவிட்டான். அவன் மயக்கத்துக்கானக் காரணத்தை கண்டறிய முடியாததால் சுற்றி நிற்பவர்கள் திகைத்த போது, ஒரு மனிதன் சாக்கடை நீரை அள்ளி வந்து அவன் நாசிக்கருகே காட்டியபோதே அம்மனிதன் மயக்கந் தெளிந்து உயிர்த்தெழுந்தான். இப்படி ஒரு கதையுண்டு. உங்களுடைய நிலையும் இப்படித் தானிருக்கிறது. அல்லாஹ்வைப் பற்றிய அகமிய ஞானத்தைப் பேசத் தலைப்பட்டால் நீங்கள் ஒன்றும் புரியாதவர்களைப் போல பேதலித்து நிற்கிறீர்கள். இந்த உலகமென்னும் சாக்கடையினருகில் வந்தால்தான் உங்கள் அறிவுக்கு உசும்புதல் ஏற்படுகிறது. இந்த மௌட்டீகத்திலிருந்து நீங்கள் விழித்தெழுவது எப்போது!

ரப்பே! தௌபா என்னும் மன்னிப்பை வேண்டுகிறோம். எங்கள் எண்ணம், சொல், செயல்களில் ஏற்படுகின்ற பாவகுற்றங்களை

மன்னித்துவிடு! உனது பொருத்தமென்னும் ரிலாவைக் கொண்டு எங்களை பொதிந்துக்கொள். உனது ரஹ்மு என்னும் கிருபையால் எங்களை இரட்சித்தருள்! நாயகனே! தங்களது வாழ்நாளின் அந்திமக் காலத்திலும், உன்னுடைய கஃபாவின் திரைச்சீலைகளைப் பற்றிப் பிடித்துக்கொண்டு, 'மன்ற ஆனி ஹக்க மஹ்ரிபத்திக' - இறைவா! உன்னை அறிய வேண்டிய அளவுக்கு நான் அறியவில்லையே!' என்று ஆற்றாமை கண்ணீருகுத்த எங்கள் நாயகம் (ஸல்) அவர்களின் பொருட்டால், எங்களுக்கு உன்னுடைய ஞானத்தை கொடுத்தருள். ரப்பி ஜித்னி இல்மா-ரப்பே எங்கள் அறிவை விரிவாக்கு.

சத்தியத்தை அறிய வந்தோரே, அறிந்துக்கொள்ளுங்கள். கலிமாவிலுள்ள 'லா' என்பது 'இல்முல் எகீன்' என்றும், இலாஹ் என்பது 'ஐனுல் எகீன்' என்றும், 'இல்லா' என்பது 'ஹக்குல் எகீன்' என்றும், 'அல்லாஹு' என்பது 'கமாலுல் எகீன்' என்றும் அறியப்படுவதாகும். 'இல்முல் எகீன்' என்பது உங்களுடைய கல்வி கேள்வி அறிவால் மக்கா நகரம் என்றதொரு நகரம் இருக்கிறதென்று நீங்களறிந்து, ஒப்புக்கொள்வதுப் போல், உங்கள் கல்வி, கேள்வி, அறிவால் ஆய்ந்து அல்லாஹு தஅலா ஒருவன் உண்டென்று ஒப்புக் கொள்வதாகும். 'ஐனுல் எகீன்' என்பது அந்நகரை நோக்கிச் சென்று அதனைக் காண்பது போல், உங்களுடைய நாயகனாகிய அல்லாஹ்வை உங்கள் அகக்கண்ணால் காண்பதாகும்! ஹக்குல் எகீனென்பது அந்த நகரத்தினுள் நுழைந்து அதனுயர்வுகளை அனுபவப் பூர்வமாக உணர்வது போல், உங்கள் நாயகனின் திருலிகாவை தத்ரூபமாகவும், பிரத்தியட்சமாகவும் நீங்கள் தரிசிப்ப தாகும். 'கமாலுல்யகீனென்பதோ, அப்புனித நகரத்தின் நடுமையத்திற்கு வந்து, அங்குள்ள கஃபத்துல்லாஹ்வில் நுழைந்து உங்கள் கண்கள் குளிர்வது போல் அல்லாஹ்வுடைய 'ரஹ்ம்!' என்னும் கருணையானந்த வெள்ளத்தில் அமிழ்ந்து நீங்கள் அவனது 'ஹையுல் கையூமெ'ன்னும் நித்திய ஏகாந்தத்தில் நிலைப்பதாகும்!

காலம் மாறிவருகிறது! பூமியின் கதவுகளை இறைவன் வெகு விரைவில் நாலா திசைகளிலும் திறந்துவிட சித்தித்திருப்பதாகத் தோன்றுகிறது. பூமி விரிவடைந்து சுருங்கிவிடும். மனித சமுதாயத்தின் மீது அவனது கோபம் திரும்பிவிடாமல் உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளுங்கள். பாதுஷாக்களும், மன்னர்களும், இந்து அரசர்களும் மதத்தின் பெயரால் மனித இரத்தத்தை சிந்தாதீர்கள். உங்களுடைய அதிகார ஆசைகளுக்கு ஆண்டவனின் பெயரை சூட்டாதீர்கள். ஏனெனில் ஆதி தூதர் பாவா ஆதம் (அலை) அவர்கள் தோன்றிய இப்புனித பூமியான 'ஜஸீரத்துல் ஹிந்த்' என்ற

இந்த நாட்டை வெகுவிரைவில் ஆபத்து சூழப்போகிறது. சாம்பல் நிற கண்களையும், முடியையும் உடைய கொள்ளையர்களின் வேட்டைக்காடாக இந்த நாடு மாறிவிடும்.

அடியார்களே! உலகின் மருட்டதலில் வீழ்ந்து உங்கள் வாழ்நாள் என்னும் விலைமதிக்க வொண்ணாத ரத்தினத்தை வீணாக்கி விடாதீர்கள். உங்கள் நாயகனை தேடியடைந்து, நித்ய வாழ்வென்னும் பேரின்ப பெருவாழ்க்கையைத் தேடும் பணியில் முயற்சி மேற் கொள்ளுங்கள். சர்வ காலங்களிலும் புகழ் அவனுக்கே உரியது. எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மீதும் தோழர்கள், குடும்பத்தார் மீதும் யா அல்லாஹ் ஸலவாத் என்னும் அருள்மாரியை என்றென்றும் பொழிவாயாக!

★★★

துருக்கி நாட்டின் தலைநகரில் ஹாஜியா சோஃபியா பள்ளிவாசலில் ஆற்றிய சொற்பொழிவு.

துருக்கி நாட்டில்

மெய்யன்பர்களே!

உங்களுடைய நப்ஸ் என்னும் அகத்தை சாகடித்து விடும்படி இறைவன் உங்களுக்கு ஏவலிடவில்லை. அதை பண்படுத்தி சீர்படுத்தும்படிதான் உங்களை ஏவுகிறான் அதை அமைதி நிறைந்த நப்ஸே 'முத்ம இன்னா'வாக மாற்றுங்கள். அப்போது இது இந்த உலகின் மருட்டதல்களை திரஸ்கரித்துவிட்டு மறுமையின் உயர்வுகளை உணர்ந்து கொள்ளும். நீங்கள் மனசாட்சியின் ஏவல்படி நடந்து இறைவன் அளிப்பவற்றில் திருப்தியடைந்து, அவன் அளிக்காதவற்றில் பொறுமையுடன் சாதிப்பீர்களானால் உங்கள் இதயம் சாந்திபெற்று முத்மயின்னா என்ற பதத்தை பெற்றுவிடும். அந்த நிலையை நீங்கள் எய்தும்போதுதான் நீங்கள் தக்வாதாரிகளாக கருதப்பட்டு தெய்வீக சமீபத்துவம் உங்களுக்கு வாய்க்கும்.

பிதுஅத்தான (புதுமையான) காரியங்களிலிருந்தும் அகீதா (எண்ணம்)க்களிலிருந்தும் தவிர்த்து நடந்து கொள்ளுங்கள். உண்மை தெளிவாக இருக்கிறது. சுன்னத்தான காரியங்களில் குழப்பம் ஏற்படுத் தாதீர்கள்.

வழிகேடான ஆறு விஷயங்களைப் பற்றி எச்சரிக்கிறேன். றாபிலிய்யா கூட்டத்தார் முதல் மூன்று குலஃபாயே ராஷீதீன்களையும் இறைவனின் முனிவுக்கு உள்ளானவர்கள் என்று கூறுகின்றனர். இவர்கள் நேர்மையான இசுலாத்தைக் கைவிட்டு விட்டவர்களாவர். காறிஜியாக்களோ ஹலரத் அலீ (ரலி) அவர்களை ஹலரத் முஆவியா எதிர்த்தது சரிதான் என்பார்கள். இவர்கள் மார்க்கத்தை விட்டு புறம்பானவர்களே.

கதரிய்யாக்கள் கற்பனைவாதிகள் கற்பனை அல்லாஹ்வுக்குரியது என்பதை மறுப்பவர்கள். ஜபரியாக்கள் நிர்பந்தவாதிகள் அவர்கள் அடியார்களின் நன்மைக்கே கூலி உண்டு. தீமைக்கு கூலி இல்லை என்போராவார்கள். முஅத்திலாக்கள் கைவிட்டவர்களாவர். இவர்கள் சிஃபத்துகளென்னும் இறைவனின் குணா குணங்களை இல்லை யென்பர்.

முஷப்பிஹாக்கள் உவமானவாதிகள் இவர்கள் இறைவனுக்கு ஒப்புவமை கூறுபவர்கள். அவனுக்கு உருவமும், உடலும், இரத்தமும் தசையும் உண்டு என்பார்கள்.

புறம்பான இந்த ஒவ்வொரு கொள்கை வாதிகளிடமிருந்தும் விலகி நிற்பது நேர்வழியாகும்.

கானூன் என்னும் சட்டத் தொகுப்புகள் எந்த நிலையிலும் ஷரீ அத்துக்கு முரண்படக்கூடாது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். கிலாஃபத் என்பது பொறுப்பான பதவி, இறைவன் தான் நாடியவர் களைப் பதவியில் அமர்த்துகிறான் என்று திருகுர்ஆன் விளக்கம் தருகிறது. ஆனால் பதவியிலிருப்போர் வரம்பு மீறாதீர்கள். ரசூலுல்லாஹி (ஸல்) அவர்களின் முன் மாதிரியையும் குலஃபாயே ராஷிதீன்களின் வழிமுறைகளையும் பின்பற்றுங்கள்.

பாரசீக நாட்டில் வாழ்ந்த ஒரு சூஃபிக்கு பேரழகியான ஒரு மகள் இருந்தாள். அழகோடு அறிவும் நிறைந்திருந்த அவளை மணந்துக் கொள்வதற்கு எத்தனையோ செல்வந்தர்கள் போட்டியிட்டு கொண்டிருந்தனர். ஆனால் அந்த சூஃபி மஹான் அவ்வூர் பள்ளி வாசலிலேயே ஒதுங்கி கிடக்கும் ஒரு எளிய வணக்க வாளியை அழைத்துவந்து தமது மகளுக்கு மணமுடித்தார். தந்தையின் விருப்பத்துக்கு தலைசாய்த்து, ஏழையின் கைப்பிடித்த அப்பெண் தன் கணவனின் குடிலுக்கு அன்றிரவே புறப்பட்டுச் சென்றாள். அங்கே ஏழை மணமகன் தான் வைத்திருந்த காய்ந்த ரொட்டியைப் பங்குப்போட்டு தனக்கும், தன் மனைவிக்கும் ஆகாரமாக்க முற்பட்டார்.

அந்த மணப்பெண்ணோ அழத் துவங்கினாள். மணமகன் மனம் நொந்துப் போனார். "பெண்ணே உன் தந்தை செய்தது தவறு அதற்கு உடன்பட்டு நானுன்னை மணம் புரிய ஒப்பியது அதைவிட பெரிய தவறு. ஏதுமில்லாத ஏழையான எனக்கு இந்த ஆசையெல்லாம் வரக்கூடாது. என்னை மன்னித்துவிடு. உனக்கு விடுதலை தரச் சித்தமாயிருக்கிறேன். உன்னை மணக்க போட்டியிடும் எத்தனையோ செல்வந்தர்களில் நீ விரும்பியவரை மணந்து நீ வாழலாம்" என்றான் அவன். அவளோ மேலும் அழத் துவங்கினாள். காரணம் புரியாமல் அம்மணமகன் மன்றாடிக் கேட்டபோது அவள், "அன்பரே, இந்த ரொட்டி உமக்கு ஏது?" என வினவினாள். அந்த எளியவனோ "பெண்ணே, இந்த ரொட்டி காலையில் எனக்கு கிடைத்தது. பகலில் பாதியை உண்டுவிட்டு, இரவுத் தேவைப்படும் என்பதற்காக பாதியை வைத்திருந்தேன்" என்றான். அவள் அவனை ஏறிட்டு "இதற்காகத்தான் நான் அழுகின்றேன். ஏனெனில் பகலில் உணவு அளித்த இறைவன், இரவுக்கும் கொடுக்க போதுமானவன் என்ற தவக்கலுடன் பகலில் எஞ்சியதை தேவையுடையோருக்கு அளிக்காமல் சேமிப்பில் இறங்கி யிருக்கிறீரே! இப்படிப்பட்ட உம்மை எனது தந்தை தக்வாதாரியாக எண்ணி என்னை மணமுடித்துக் கொடுத்தாரே என்றுதான் அழுகின்றேன்" - என்றாள். அந்த நபர் அதிர்ந்து போனான். "ஒன்று இந்த வீட்டில் நானிருக்க வேண்டும் அல்லது இந்த ரொட்டி இருக்க வேண்டும்" என்றாள் அவள்.

அன்பர்களே! உங்களுடைய தவக்கல் எந்த நிலையிலுள்ளது? என்று சிந்தித்துப் பாருங்கள்! இறைவன் உணவை அளந்தெழுதாத எந்த ஜீவனும் இவ்வுலகில் பிறப்பதில்லை! என்று கூறுகிறான். நீங்களோ நாளின் பெரும்பகுதியை பொருளின் தேட்டத்திலேயே செலவிடுகிறீர்கள். உங்கள் தொழுகையையும், வணக்கத்தையும், துஆவையும் கூட உலக அசைகளே ஆட்கொண்டுவிடுகின்றன. அந்தோ கை சேதமே! இறைவனைப் பற்றிய சிந்தனை உங்களுக்கேற்படுவது எப்போது? 'தவக்கல்து அலல்லாஹ்' என்று நீங்கள் உறுதியுடன் இருப்பது எப்போது? 'என் நினைவில் தன் நேரத்தைக் கழித்து விடுபவனுக்கு நான் அறியாப் புறத்திலிருந்து உணவு அளிக்கின்றேன்' என்று இறைவன் கூறியிருப்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டாமா? உங்கள் வியாபாரமும், தொழிலும், கொள்வினை, கொடுப்பினையும் இறைவனை நீங்கள் மறந்திருக்க செய்வதினின்றும் நீங்கள் தவிர்ந்து கொள்ளுங்கள்! 'இம்மை, மறுமையின் விளைச்சல் நிலம்' என்ற நபி மொழியை நீங்கள் மறந்துவிடாதீர்கள்!

'எனது நல்லடியார்களுடைய இல்லத்தில் அதிகாலையிலும், அந்திக் கருக்கலிலும் நான் நினைவு கூறப்படுகிறேன். எனது திருநாமத்தை அவர்கள் நினைந்தவாறு இருக்கிறார்கள்!' என்று இறைவன் பெருமைப்படுகின்ற நல்லடியார்களுடைய கூட்டத்தில் நீங்களுமாகி விடுங்கள். ''அல்லதீன்ஹும் அலா ஸலாத்திஹிம் தாயிமூன'' - அவர்கள் அல்லாஹ்வுடைய வணக்கத்தில் நிலைத்து விடுகிறார்கள் என்று இறைவன் யாரை கூறுகிறான் என்று எண்ணிப் பார்த்தீர்களா? அல்லாஹ்வுடைய மெய் நேசர்கள் அவனுடைய வணக்கத்திலிருந்து மாறுவதே கிடையாது. அவர்கள் தங்கள் நாயகனின் அன்பில் மூழ்கிவிடுகிறார்கள். ஐ வேளை தொழுகை என்பது கடமையான வழிபாடென்கிறபோது, மெய்யடியார்களின் தொழுகைக்கு நேரமும், தருணமும் கிடையாது. பாமரர்கள் திருமக்காவிலுள்ள கஃபத்துல்லாஹ் என்கிற இல்லத்தை நோக்கித் தொழுகின்றபோது, மெய்யன்பர்களின் முன்னோக்கும் கிப்லாவோ தங்கள் நாயகனின் முகமாகவே இருக்கிறது.

'ப அய்னமா துவல்லு பஃதம்ம வஜ்ஹுல்லாஹி' - ''நீங்கள் எங்கு திரும்பினாலும் அல்லாஹ்வுடைய முகத்தையே அங்கு காண்கின்றீர்கள்'' என்ற மறை திருவசனம் அவர்களுக்கு யதார்த்த மானதாக ஆகிவிடுகிறது. ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வையன்றி வேறு எதனையுமே அறிவதில்லை. ''நிச்சயமாக அல்லாஹ்வும், உன் 'தான்' என்ற தன்மையான நப்ஸும் தவிர இப்புவியில் ஒன்றுமே இல்லை'' என்ற நிலைக்கு நீ வந்துவிடு என்று சற்குருநாதர் கௌதுல் அஃலம் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். ஹலரத் அலீ (கர்) அவர்களோ 'அல்லாஹ்வையன்றி என்னால் எதையுமே பார்க்க முடியவில்லை'யென்று கூறினார்கள்.

நீங்களோ உங்கள் இறைவனைத் தவிர மற்றவற்றை வணங்கும் போக்கிலிகளாகி விட்டீர்கள். விக்கிரகங்களை வணங்குவது மட்டும்தான் இறைவனுக்கு இணை வைப்பது என்று எண்ணிடும் பேதைகளே, உங்கள் மனதில் பொன், பொருள், புகழ் போன்ற எத்தனை உடைக்க முடியாத விக்கிரகங்களை நீங்கள் உண்டாக்கியிருக்கின்றீர்கள். உங்கள் மௌட்டீகத்திலிருந்து நீங்கள் விலகிவிடுங்கள் விழித்தெழுங்கள்! ''எவன் தனது கெடுதியான நப்ஸை தன் நாயனென்று எடுத்து கொண்டானோ அவன் வழிக்கெட்ட நஷ்டவாளிதான்'' என்ற திருவசனத்தை நோட்டமிட்டுப் பாருங்கள். உங்கள் கண்களும், சிந்தையும் போகின்ற திசையிலெல்லாம் போய்க் கொண்டேயிருப் பீர்களென்றால் நிச்சயமாக உங்களுக்கு அழிவுதான். நீங்கள் நரகத்தின்

வாசலுக்குப் போய் நின்ற பின், விழித்தெழுவதில் லாபமில்லை. உங்கள் மனதை அதன் போக்கிலேயே விட்டுவிடுவீர்களானால் அது உங்களை நரகப் படுகுழியில் தள்ளிவிடும்.

அன்பர்களே! கஃகுபத்துல்லாஹ்வினுள் அமைந்திருந்த சிலைகளில் பெரும்பாலானவை உடைத்து தகர்க்கப்பட்ட நிலையில் எஞ்சி நின்ற இரு மாபெரும் விக்கிரகங்கள் லாத், உஜ்ஜா ஆகிய இரண்டையும் யாராலும் உடைக்க முடியவில்லை. அப்போது எம்பெருமான் (ஸல்) அவர்கள் அலீ(கர்) அவர்களை அழைத்து தங்கள் புஜங்களில் ஏறி நின்று அச்சிலைகளை தகர்க்குமாறு ஏவ, அப்படியே அலீ(கர்) அவர்களால் அந்த இரு சிலைகளும் தகர்த்தெறியப்பட்டன. லாத்தும், உஜ்ஜாவும் மனிதனின் இதயத்திலுள்ள கெட்ட நப்ஸும், ஷைத்தானு மன்றி வேறென்ன? உங்கள் இரு தோள்களின் மீதும் அலீ(கர்) அவர்களின் திருப்பேரரும் அல்லாஹ்வின் மஹ்பூபுமான சற்குருநாதர் கௌதுல் அஃலம்(ரலி) அவர்களை ஏற்றி சுமந்து கொள்ளுங்கள். உங்கள் இதயமென்னும் கஃபாவினுள்ளிருந்து லாத்தையும், உஜ்ஜாவையும் உடைத்து அல்லாஹ்வின் ஆட்சியை உங்கள் இதயத்துள் நிலை நாட்டுங்கள்.

ஷரீஅத்துடையோர், தரீக்கத்துடையோர் என்ற சர்ச்சையை உண்டாக்கி சமூகத்திலும், மார்க்கத்திலும் குழப்பம் உண்டாக்குவோரின் கூட்டத்தில் சார்ந்துவிடாதீர்கள். ஷரீஅத்தும், தரீக்கத்தும் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட மார்க்கங்களல்ல. லாஹிர், பாதின் என்றறியப் படும் வெளிரங்கமான, அந்தரங்கமான எல்லா வணக்க வழிபாடு களையும் முன்னோர்கள் ஷரீஅத் என்றே வழங்கிவந்தார்கள். இவ்விரு வழிபாடுகளின் அமல்களுக்கும் ஃபிக்ஹ் என்று பெயரிட்டார்கள். இமாமுல் அஃலம் இமாம் அபூ ஹனீஃபா (ரலி) அவர்களும் ''மனிதனின் ஆத்மாவுக்கு நன்மை விளைவிப்பதையும், தீமை விளைவிப்பதையும் பகுத்தறியும் பாடத்துக்கே 'பிக்ஹ்' என்று பெயர்'' என விளக்கமளித்து இருக்கிறார்கள். ஆனால் காலப்போக்கில் லாஹிரான அமல்களுக்கு பிக்ஹ் என்றும், பாதினான அமல்களுக்கு 'தஸவுஃப்' என்றும் பெயரிட்டழைத்தார்கள். முடிவில் மனதை, நப்ஸை பக்குவப்படுத்தும் அமல்கள், தரீக்கத் என்று அழைக்கப்பட்டது. எம்பெருமான் (ஸல்) அவர்களோ 'ஷரீஅத்' என்பதை மரம், தரீக்கத் அதன் கிளைகள், ஹகீகத் அதன் இலைகள், மஃரிபத் என்பது அதன் கனிகள். இவை அனைத்தும் திருகுர்ஆனில் உள்ளன - என்று கூறியதாக ஹதீத் ஒன்று உள்ளது. 'ஷரீஅத்' என்ற மரமின்றி 'தரீக்கத்' என்ற கிளைகள் இருக்கப் போவதில்லை. மஃரிபா என்ற

கனிகளும் உங்களுக்கு கிடைக்கப் போவதில்லை. மஹ்ரிபா என்ற கனிகளை உண்ண பிரயத்தனப்படாதவர்கள் ஷரீஅத்தின் மர நிழலில் இளைப்பாறுவதன்றி ஆத்ம பசி அடங்கப்போவதில்லை.

அன்பர்களே! இந்த உண்மைகளை நோட்டமிடுங்கள். 'ஞானம் அனுஷ்டானங்களை கூவி அழைக்கிறது. அது வராது போனால் ஞானமும் போய்விடுகிறது' - என்ற நபிமொழி ஒன்றுண்டு. ''தத்துவங்களைப் பேசிப்பேசி காலத்தை வீணாக்காதீர்கள். உங்களுடைய வணக்கங்கள் உப்பில்லாத மாவைப் போலிருக்கிறது. என்னிடம் வாருங்கள். உங்கள் வணக்கமென்னும் மாவில் 'சித்த சுத்தி' என்னும் உப்பைக் கலந்து உங்கள் வணக்க வழிபாடுகள் இறைவனளலில் ஒப்புக் கொள்ளும்படி செய்துவிடுகிறேன்'' என்று சற்குருநாதர் கௌதுல் அஃலம் அறைகூவல் விடுத்திருக்கிறார்கள். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசித்திரியும் முனாஃபிக்கீன்களே, இறைவனுடைய நல்லடியார்களின் வாசல்களுக்கு புறங்காட்டிச் செல்லாதீர்கள் நல்லடியார்களின் சமாதிகளை தரிசனம் செய்வதால் உங்களுடைய சர்வ காரியங்களும் நேர்பெறும் என்பதிலும் சந்தேகம் வேண்டாம். மார்க்க ஞானமுடையோரை நாடிச்சென்று உங்களுடைய மார்க்கத்தை ஒழுங்குப்படுத்திக் கொள்ளுங்கள். நுனிப்புல் மேய்வது போல் மதச் சடங்குகளை அனுஷ்டித்து மரணத்தின் வாசலில் வழுக்கிவிழாதீர்கள்.

ஸாலிக்கீன்களே! இன்ஸான் என்ற ஒரு சொல்லுக்கு இரு பொருள்களுண்டு - என்று பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். இன்ஸான் நாகிசு என்பவன், தான் வந்த வழியை மறந்து நாசமாய் போனவனாவான். இன்ஸான், காமில் என்பவனே தான் வந்த வழியறிந்து நடந்து தன் இலட்சியத்தில் நிரப்பமானவனாவான். இந்த இன்ஸானில் தான் சிர்ரென்னும் ரகசிய மடங்களும் அடங்கி கிடக்கிறது. 'அல் இன்ஸானு ஸிர்ரி' என்று ஹதீத் குத்ஸியிலே கூறப் பட்டுள்ளது. இந்த மனிதனில் இறைவன் மறைந்த இரகசியமாக இருக்கிறான். இறைதூதர் ஹலரத் கிஜ்ர் (அலை) அவர்கள் கூறியதாக ஒரு பொன்மொழி உண்டு. ஃபிக்ருக ஃபீக யக்ஃபிக' -உன் தன்னில் தானே நீ சிந்தை செய்வதே உனக்கு போதுமானது' என்ற அம்மொழியின் நுட்பத்தை கவனியுங்கள். ''நிச்சயமாக நான் உங்கள் நாடி நரம்புக்கும் சமீபத்தில் இருக்கிறேன். நீங்கள் நோட்ட மிடுவதில்லை'' என்று புர்கான் மறையிலே நாயகன் கூறுவதை நீங்கள் சிந்திக்க வேண்டாமா? எனவேதான் 'நொடி நேரம் சிந்திப்பதானது ஆயிரம் இரவுகளின் வணக்கத்தைவிட மேலானது' என்று அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அன்பர்களே! உங்களை நேரிய வழியின் பக்கமாக சிந்திக்க விடாமல், செல்லவிடாமல் தடுத்துக்கொண்டு நிற்பதெல்லாம் உங்களுடைய நப்ஸும், ஷைத்தானுமன்றி வேறு யாருமல்ல. உங்களுடைய கொடிய பகைவன் உங்கள் இரு விலாக்களுக்கும் இடையிலுள்ளவன் - என்ற நபிமொழியை நோட்டமிடுங்கள். உன்னுடைய நப்சுடன் பீசபீல் செய்வது உனக்கு 'பர்ல்ஐன்' என்ற கட்டாயக் கடமையாகும் என்பதை மறந்துவிடாதீர்கள். நப்சுடன் செய்யும் இந்த பீஸபிலைத்தான் முஜாஹதா என் சத்முயற்சி என்று கூறப்படுகிறது. இறைவன் தன் திருமறையில், ''யா அய்யுஹல்ல தீன ஆமனதல்லாஹு வப்தஹு இலைஹில் வஸீலத் வஜாஹிது பீஸபீலிஹீ லஅல்லகும் துஃப்லிஹூன் - ஈமான் கொண்ட விசுவாசி களே! அவனளவில் சிபாரிசு தேடி, அவனது பாதையில் தெண்டித்து ஜெயம் பெறுங்கள்'' என்று கூறியுள்ளான். இந்த பாதையில் நீங்கள் துணையின்றிப் போகாதீர்கள் என்று மவுலானா ரூமி (ரஹ்) அவர்கள் எச்சரிப்பதையும் மறந்துவிடாதீர்கள். அல்லாஹ்வின் பாதையில் உங்களை அழித்து, 'பனா'வை அனுபவித்து 'பகா'வென்னும் நித்தியானந்த நிலையை அடைவதில் பின்வாங்காதீர்கள். உங்களுடைய வழிகாட்டியால் போதிக்கப்படும் போதனைகளை சிரமேலேற்று ஜெயசீலர்களாகுங்கள், சத்தியப் பாதையில் உங்களுக்கு உரிய கிப்லா சத்தியப் பொருளுமாகும். அடியான் அல்லாஹ்வுடைய இல்லத்தை நோக்கி கடமையான வணக்கங்களாலும், நபிலான (இஷ்டபூர்வமான) தொழுகைகளாலும் அல்லாஹ்வை நெருங்கும் போது அல்லாஹ் அவன்மீது கனிவுகொண்டு அவனை தன் ஜோதியின் பக்கமாக வழி காட்ட அவனுக்கு ஓர் வழிகாட்டியை அனுப்புகிறான்.

''நூரின் அலாநூரின் யஹ்தில்லாஹுலி நூரிஹி மன்யஷாவு'' பிரகாசத்தின் மீது பிரகாசம். அல்லாஹ் தான் நாடுபவனை. தன் ஜோதியின் பக்கமாக வழிகாட்டுகிறான் - என்ற மறை வசனத்தை நோட்டமிடுங்கள். அடியானுக்கு வழிகாட்டுவதற்கு வந்துசேரும் நல்லடியார், அவன் அறியாதவற்றையெல்லாம் அவனுக்கு போதிக்கிறார். எம் பெருமான் (ஸல்) அவர்கள் ஹதீஸின்படி, ''அஷ்ஷைஃகுபி கம்மிஹி கஅன்ன நபி ஃபிஉம்மத்திஹி'' உம்மத்தினருக்கு அவர்களின் நபியைப்போன்று தான் ஷைக்கானவர் தன் கூட்டத்தினர்க்கு இருக்கிறார். அவரது போதனைகளின் அடிப்படையில் அடியான் முஜாஹதா - முராக்கபா - முஆயனா - முகாசபா - முனாஸரா என்ற தவநிலைகளில் அவன் படிப்படியாக உயர்த்தப்படுகிறான். காப கவுசைன் என்ற இரு புருவ மத்திபத்துடைய நடுவில் ஆன்ம உலகின் வாசல் திறந்திருப்பது அவனுக்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

தன் வழிகாட்டியை 'ஹுலா இலாஹா இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலில்லாஹ்' ஏன்ற தாளத்தில் வைத்து தன் புருவத்தில் சாதகம் தியானம் செய்கிறான். பின்னர் அவர் தன்னில் அவன் தன்னை அழிமானம் என்னும் ஃபனா செய்யும் பாடத்தைப் போதிக்கிறார். அந்த ஃபனா என்னும் நிலையில் பனாபிஷ்ஷைக், பனாபிர் ரஸூல், பனாபில்லாஹ் என்ற மூன்றும் ஒன்றாக்கப்படுவது எப்படி என்பதை அவர் போதிக்கிறார். இறுதியில் அவன் ஃபனா என்ற நிலையில் தான் என்பதென்ன என்று விளக்கிவைக்கப்படுகிறான். முற்கால வேதங்களிலும், ஆகமங்களிலும் உலகெங்கிலுமுள்ள மறைகளிலும் உணர்த்தப்படும் ஒரே உண்மை அவனுக்கு தெளிவாக உணர்த்தப் படுகிறது. 'யாஸீன் வல் குர்ஆனில் ஹகீம் இன்னக லமினல் முர்ஸலீன்' - மனிதனே! நிச்சயமாக நீ நேரிய வழியில் இருக்கிறாய்' என்று அவனுக்கு உணர்த்தப்படுகிறது. மன்அரஃப நஃப்ஸஹு ஃபகத் அரப நப்ஸஹு' 'தன்னை அறிந்தவன் தன் நாயனை அறிந்தான்' என்ற மேலான வாக்கியத்தின் உண்மையை அவன் உணர்ந்து கொள்கிறான்.

ஸாலிஹீன்களே! இப்பாதை அனுபவத்திலன்றி விளங்காததாகும். ஆயினும் நீங்கள் சத்தியத்தை உணரும் பொருட்டு தீக்குடைய இப்பாதையை உங்களுக்கு ஓரளவு விளக்கிக் கூறுகிறேன். சங்கை மிக்க நம்முடைய குரு நாயகம், ஷைகு பில் கவுது ஸையித் முஹம்மத் கவுது குவாலிரி (ரலி) அவர்கள் கோர்வை செய்த ஜவாஹிருல் ஹம்ஸாவென்னும மகோன்னதமான கிரந்தத்தில் சகல தீக்குகளுக்கும் பொதுவானதொரு திக்ரு முறையை கூறியிருக்கிறார்கள். சற்றே செவிமடுத்து பயனடையுங்கள். அன்பர்களே! கல்பு என்பது ஒன்றாக இருந்தாலும் நப்ஸ் என்பது ஏழாக இருக்கிறது. இந்த ஏழு நப்ஸுகளும் அந்த ஒரே கல்பில் உதயமாக கூடியவையாம்!

முதலாவதாக உலகின் இச்சைகளையே ஏவிக்கொண்டிருக்கும் 'நப்ஸே அம்மாரா'. வெளிரிய மஞ்சள் நிறமுடைய இந்த நப்ஸுதனை சாந்தப்படுத்த லா இலாஹ இல்லல்லாஹ் என்ற திக்ரை ஒரு இலட்சம் முறை நீங்கள் ஜெபிக்க வேண்டியது. இரண்டாவதாக பாவத்தில் மூழ்கிப் பச்சாதாபப்படும் குணத்தையுடைய 'நப்ஸே லவ்வாமா'வின் நிறம் மஞ்சளாகும். இதற்குரிய 'திக்ர்' அல்லாஹ் என்று ஒரு இலட்சம் முறை மொழிவதாகும்.

மூன்றாவதாக நல்லதை செய்யும்படி ஏவும் 'நப்ஸே முல்ஹிமா'. இதன் நிறம் சிவப்பு. இதற்குரிய திக்ர் 'ஹூ' என்று தொண்ணூறாயிரம் முறை சொல்வதாகும். நான்காவதான 'நப்ஸே முத்மயின்னா' உலகின்

ஜலாட்டங்களை ஒழித்து ஹக்களவில் ஐக்கியப்பட்டு அமைதிகாணும் பண்புடையது. இதன் திக்ர் 'ஹை' என்று எழுபதினாயிரம் தரம் உச்சரிப்பதாகும். இதன் நிறம் வெள்ளை. 'நப்ஸே ராலியா' வென்னும் ஐந்தாவது நப்ஸ் எல்லா நிலைகளிலும் அல்லாஹ்வை பொருந்தி நிற்கும் பண்பு கொண்டது. இதன் ஒளி பச்சை. இதன் திக்ர் 'கையூம்' என்று தொண்ணூறாயிரம் தடவை உச்சரிப்பதாகும். ஆறாவதாக நப்ஸே மர்லிய்யா கருப்பு நிற ஒளியையுடையது. ஹக், ஹல்க் இரண்டையும் பொருத்துத்துடன் பொருந்தி நிற்பது. இதன் திக்ர் 90,000 தடவை 'ரஹ்மான்' என்று தொனிப்பதாகும். இறுதியானதும், ஏழாவதானதுமான நப்ஸ், 'நப்ஸே காமிலா' என்பதாகும். இது எல்லா சிபத்துகளும் நிறப்பமாகி ஹல்க்குகள் அடங்களின் மீதும் கிருபை யோடிருக்கும். இதன் திக்ர் ஒரு இலட்சம் தரம் 'ரஹீம்' என்பதாகும்.இதற்கு தனி ஒளிவு கிடையாது. முன்னர் கூறப்பட்ட அனைத்திலும் அலை மோதி புரளும் ஒளியையுடையதாகும்.

அல்லாஹ்வின் மெய்யடியார்களே! அவனது 'லிகா' வெனும் நிசனம் பெறும் பொருட்டு உணர்ச்சி பெறுங்கள்! எங்கள் ரப்பே! இம்மையிலும், மறுமையிலும் உனது நற்பேறுகளை எங்களுக்கு கிருபை செய்தருள்!

அன்பர்களே! உங்களுடைய ஒவ்வொரு மூச்சிலும் அல்லாஹ்வை நினைவுபடுத்துங்கள். அல்லாஹ்வை நினைவுப்படுத்தாத ஒவ்வொரு நொடியும் நீங்கள் மரணித்துவிடுகிறீர்கள் என்பதை உணருங்கள். இந்த ஜீவனும், வாழ்வும் அவனுடையதேயாகும்.அவனை மறக்கும் ஒவ்வொரு நொடிப் பொழுதும் குப்ரியத்தான பொழுதாகும். அஜ்மீர் நகரில் அடங்கியிலங்கும் ஹாஜா முஈனுத்தீன் சிஷ்தி நாயகத்தின் குருவாகிய பெரியார் ஹாஜா உதுமான் ஹாரூனி அவர்களின் சீடர்களில் இருவர் ஒரு நாள் இரவில் தங்கள் குருநாதரவர்கள் காலதியடைந்துவிட்டதாக கனவு கண்டு பதறியெழுந்தார்கள். விடிந்தும், விடியாததுமாக இருவரும் சந்தித்து தாங்கள் கண்ட கனவை ஒருவர்க் கொருவர் கூறிக்கொண்டு பெரிதும் வருந்தினர். இருவரின் கனவும் ஒன்றாக இருக்கவே ஹஜ்ரத் அவர்கள் இவ்வுலகை விட்டு மறைந்து விட்டதாக உறுதி செய்துக்கொண்டு, அவர்களிருவரும் ஹாரூன் நகர் நோக்கி பிரயாணப்பட்டனர். வழிநெடுகிலும் விலங்கினங்களும், புள்ளினங்களும், மச்சங்களும் கூட அவர்கள் போகும பாதையில் உதுமான் ஹாரூனி காலமாகிவிட்டார் என்று மொழிந்துக் கொண்டிருந்தன. மிகவும் கை சேதமடைந்த அந்த சீடர்கள் ஜனாஸாவை யேனும் சென்று காணலாம். முடியாவிடில் கப்ரிலேனும் ஜியாரத்

செய்யலாம் என்று விசனத்துடன் பல நூறு மைல்கள் விரைந்து கடந்து, ஹாரூன் நகரை ஓர் அதிகாலையில் போய் அடைந்தார்கள். விடிந்தும், விடியாதிருக்கவே நேரே தம் குருநாதர் இல்லம் சென்று கதவைத் தட்டியப்போது, ஹலரத் உதுமான் ஹாரூனி அவர்களே கதவைத்திறக்கக் கண்டு திடுக்கிட்டார்கள். பீடர்களிருவரும் தாங்கள் கண்ட கனவையும் வழிநெடுக நடந்த விருத்தாந்தங்களையும் கூறினார்கள். ஹஜரத் அவர்களோ மெத்த வருத்தத்துடன், ''ஆம்! மைந்தர்களே, நான் எனது மூச்சில் ஒன்றை சில நாட்களுக்கு முன் அல்லாஹ்வை மறந்தவனாக விட்டுவிட்டேன். அன்றே நான் மௌத்தானேன். அந்தக் கருணையாளன் என் பிழையை மன்னித்து காப்பாற்றாவிடில் நான் மௌத்தானவனே'' என்று கூறி துக்கப்பட்டார்கள்.

அன்பர்களே! சிந்தித்துப் பாருங்கள். அல்லாஹ்வுடைய நேசர்கள், அடியார்களுடைய சத்முயற்சி எத்தகையது என்பதை கணமேனும் சிந்திப்பீர்களானால் உங்கள் பொடுபோக்கான வாழ்க்கையிலிருந்து மீட்சிப் பெறுவீர்கள். உங்கள் இம்மையும், மறுமையும் சீர்பெறும்! இறைவா! கணமேனும் உன்னை மறவாத நல்லடியார்களின் கூட்டத்தில் எங்களை ஆக்கிவை! உன்னுடைய மேலான பொருத்தத்தால் எங்களை பொருந்திக்கொள்!

புகழனைத்தும் உனக்கே உரியது! ஸலாமும், ஸலவாத்தும் எம்பெருமான் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் கிளையார், கோத்திரத்தார் மீதும், தோழர்கள் மீதும் உண்டாவதாக!

★★★

காஹிரா என்னும் காயல் பதியில் ஆற்றிய சொற்பொழிவு

காயல் பதியில்

அல்லாஹ்வுடைய நல்லடியார்களே! சதா காலமும் எம்பெருமான் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தை பொழிந்து வருமாறு உபதேசிக்கிறேன். ''நானும் என்னுடைய மலக்குகளும் ரஸூல் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தை மொழிந்தவர்களாக இருக்கிறோம். மூஃமீன்களே! நீங்களும் அவர்மீது ஸலவாத்தை மொழியுங்கள்!'' என்று அல்லாஹ் உங்களுக்கு ஏவியுள்ளான். அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள் மீது நீங்கள் மொழிந்திடும் ஸலவாத்தானது உங்கள் மீது இறையனுக்

கிரகமாக திரும்பிவரும். உங்கள் கஷ்டங்களை நீக்கி, துன்பங்களை அகற்றி சாந்தியை உங்கள் இதயத்துக்கு வழங்கும்.

அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள் படைக்கப்பட்டிராவிடில் இவ்வுலகமும் அகிலமும் இல்லாமையிலிருந்து படைக்கப்பட்டிராது. ''நபியே! நீர் இல்லையாயின் வானங்களையும், பூமியையும் படைத்திருக்க மாட்டேன்'' என்று அல்லாஹ் கூறியுள்ளான். ''பாவா ஆதம் (அலை) அவர்கள் மண்ணிற்கும், தண்ணீருக்குமிடையில் உருவாகிக் கொண்டிருந்த நிலையில் நான் அல்லாஹ்வின் நபியாயிருந்தேன்'' என நபி பெருமான் (ஸல்) அவர்களே கூறியிருக்கிறார்கள். அவர்கள் இம்மை, மறுமையாகிய இரு உலகிற்கும், மனிதர்கள், ஜின்கள் ஆகிய இருவகுப்பினர்க்கும், அறபிகள் அறபியரல்லாதாராகிய மனித குலம் முழுமைக்கும் தலைவரும், பாதுகாவலரும் ஆவார்கள். ஆகும், ஆகாது என்று விளக்கி கூறுபவர்களில் அவர்களைவிட மேலான வாக்கியத்தை கூறுவோர் யாருமில்லை.

அன்பர்களே!

''சம்பூரணம் பெற்ற நபி (ஸல்)யின் நற்குணத்திலும் பேரழகிலும் அவர்களுக்கு முன்னுள்ள நபிமார்கள் அனைவரும் பங்குப்பெற்றனர். அவர்கள் கொண்டுவந்த அற்புதங்களனைத்தும் பெருமானார் (ஸல்) அவர்களின் ஜோதியினின்றேதான் கிடைத்தன'' என்று ஷர்புத்தீன் முஹம்மது பூஸரி (ரலி) அவர்கள் கூறுகின்றனர். அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் அந்தரங்க நிலையானது படைக்கப் பட்ட எந்த சிருஷ்டியின் தத்துவத்தினாலும் உணர்ந்துக்கொள்ள முடியாததாயிற்று. ''அவர்களின் அருகில் அன்பால் நெருங்குவோரும், அவர்களை வெறுத்து அகன்றோரும் அவர்களின் அந்தரங்கம் பற்றிய விஷயத்தில் மட்டும் வாய்மூடி மௌனிகளாகவே ஆயினர்'' என்று இமாம் பூஸரி அவர்கள் கூறுவதை நோட்டமிட்டுப் பாருங்கள்.

''பெருமானார் (ஸல்) அவர்களின் பொருட்டு தன்னை மன்னித்து விடும்படி ஆதி பிதா பாவா ஆதம் (அலை) அவர்கள் வேண்டுதல் விடுத்தபோது நான் அவர்கள் மன்னிக்கப்பட்டார்கள்'' என்று அல்ஹதீஸில் காணக்கிடப்பதை கவனியுங்கள். உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கும் நீங்கள் பாவா ஆதம் (அலை) அவர்களின் முன்மாதிரியை பின்பற்றலாம் அல்லவா?

உங்களுடைய நபியை நீங்கள் எப்படி கண்டுக்கொள்வீர்கள்? ''எனக்கு பின் நபிமார்கள் வரமாட்டார்கள். நான் நபிமார்களில் முத்திரையாயுள்ளேன்'' என்று பொருள்பட (ஸல்) அவர்கள் கூறியதிலுள்ள

தாத்பரியத்தைப் பாருங்கள். ''உங்களுக்கிடையில் ரஸூல் உண்டாகியிருப்பதை நீங்கள் கவனிக்க வேண்டாமா?'' என்று திருவசனத்தில் உங்களுக்கு போதுமான விளக்கமிருக்கிறது.

அன்பர்களே! அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்களின் சிரசு அர்ஷுக்கு மேலாக இருக்கிறதென்றும், அவர்களது பாதம் தஹ்தத்தாரா எனும் பாதாள உலகம் வரை நீண்டிருக்கிறதென்றும் உணருங்கள். இன்னும் அவர்களின் நிழலுக்கு ஈகை கிடையாது. அவர்களுக்கு மல, ஜல உபாதைகள் கிடையாது. நித்திரை கிடையாது. அவர்களின் பார்வை முன்னும், பின்னும் ஒரேமாதிரியாக, தெளிவாக இருந்தது. அவர்களின் மேனி தொட்டுணர்வதற்கான கண்டிப்பு உடையதாக இல்லை. அவர்கள் இருக்குமிடத்திலிருந்து காததூரம் கஸ்தூரிவாசம் வீசும். அவர்கள் நடந்தால் மேகம் குடையிடும். இந்த விஷயங்களெல்லாம் உங்கள் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட உண்மைகள். சுன்னத் வல் ஜமா அத்தின் அகீதாவின்படி ஷரீஅத்தை ஏற்போர் இவ்வுண்மைகளை ஒப்பவேண்டும்.

இன்னும் அவர்களது பெருமை, அருமைகளையெல்லாம் பேசிக்கொண்டே போகலாம். தரீக்கத்தின்படி உங்களுடைய உயிர் (ஹயாத்) அவர்களாகவே இருக்கிறார்கள். ஹக்கீகத்தின் அனுமானத்தில் இன்ஸானுடைய ஆன்மாவாகிய ரூஹ் முகம்மதேதான். மஹ்ரிபத்தின் அனுபவத்திலோ அவர்கள் உங்களுக்கு அல்லாஹ் அல்லாது வேறல்ல. அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறான். ''லா நுஃபர்ரிக்கு பய்ன அஹதின் மிர்ருஸ்லி - எனக்கும், என் ரஸூலுக்குமிடையில் எவ்வித வேற்றுமையுமில்லை என்று. 'லா இலாஹா இல்லல்லாஹ' என்ற மூல மொழிக்கு, வணக்கத்திற்குரிய நாயன் அல்லாஹ்வை தவிர யாருமில்லை, இதை சொல்ல வந்தவரும் அல்லாஹ்வைத் தவிர யாருமல்ல என்று ஒரு பெரியார் விளக்கம் தருகிறார்கள். ''நான் 'ஐன்' இல்லாத அரப் ஆவேன் 'மீம்' இல்லாத அஹ்மதாவேன்'' என்றுஅண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக வரலாறு உண்டு. ஆனால் இந்த அந்தரங்கமான கருத்துக்களைக் கேட்டு உங்கள் அகீதாவைக் குழப்பிக் கொள்ளாதீர்கள். முஹம்மத் (ஸல்) அவர்களது தானத்தில்தான் அல்லாஹ் தன்னை கமாலியத்தாக (சம்பூர்ணமாக) வெளிப்படுத்திக் கொண்டான் என்று ஹலரத் முஹையிதீன் இப்னுல் அரபி (ரலி) கூறுவதுதான் சரியான கருத்து. யதார்த்தம் முச்சுடராகவே இருக்கிறது! அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள், நான் அல்லாஹ்வின் அடிமையாகவும், தூதனாகவுமிருக்கிறேன் என்று வலியுறுத்துவதை மறந்துவிட வேண்டாம்.

அரூபியான அல்லாஹ்வை தேடியடையுமுன்னர் உங்களுடைய ரஸூலைத் தேடியடைவதில் பிரயத்தனப்படுங்கள். உங்களுடைய ரஸூலைக் கண்டு கொள்வீர்களேயானால், அல்லாஹ்வை நீங்கள் காண்பது சுலபமானதாகிவிடுமல்லவா? 'அல்உலமாவு வரதத்துல் அன்பியா' - உலமாக்கள் நபிமார்களது வாரிசுகள் என்ற ஹதீதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களல்லவா? அகமிய ஞானத்தை அறிந்த உலமாக்களே நபிமார்களின் வாரிசுகளாவார்கள். அத்தகைய மகோன்னதமான நல்லறிவாளர்களை இனங்கண்டு நீங்கள் அணுகுவீர்களேயானால், அவர்களே உங்களுக்கு ரஸூலைக்கண்டு கொள்ளும் வழியையும் காட்டி வைப்பார்கள்.

சற்குருநாதர் கௌதுல் அஃலம் (ரலி) அவர்களின் மறைவுக்குப் பிறகு அவர்களைக் கண்ணால் காண வேண்டுமென்ற அவாவுற்ற ஒரு மனிதர் பகுதாத் நகர் சென்று, அவர்களுடைய தர்பாரில் நுழைந்து, அங்கேயே நெடுங்காலம் தங்கி, தன் ஆவலை வெளிப்படுத்தி, ஆற்றாமைக் கொண்டவராக அந்தி, பகல் அழுது கொண்டிருந்தார். ஒருநாள் நள்ளிரவில் அந்த மனிதருக்கு அவரது கோரிக்கை நிறைவேறுகின்ற வாய்ப்பு உண்டாகியது. யாருமற்ற அமானுஷ்ய சூழ்நிலையில் ஆண்டகையின் அடக்கத்தலத்தின் கதவுகள் திறந்து கொண்டன. 'உள்ளே வா' என்ற அசரீரி அழைப்பும் கேட்டது. சுய நினைவின்றி அம்மனிதர் உள்ளே நுழைந்து, ஆண்டகை அவர்கள் தம் மஞ்சத்தில் படுத்திருக்கக் கண்டு அருகே நெருங்கினார். அவர்களோ போர்வையைப்போர்த்துக்கொண்டு படுத்திருந்தார்கள். இந்த மனிதர் மனமுருகி, 'இரட்சகரே!'' என கூவியழைக்க, அவர்கள் போர்வையை விலக்கிக்கொண்டு எழுந்தார்கள். அப்போது அவர்களைக் கண்டு அம்மனிதர் திடுக்கிட்டப் போனார். அங்கே உட்கார்ந்து இருந்தவர்கள் அவரது ஷெய்கேயன்றி யாருமல்ல. ஷெய்க் அவர்கள் புன்னகையோடு அமர்ந்திருந்தார்கள். காட்சி மறைந்தது. அந்த மனிதர் தாம் அமர்ந்திருந்த இடத்திலேயே இருக்கக் கண்டார். கௌதுனா அவர்களைத் தேடிச் சென்றால் அங்கு தன் ஷெய்கே இருந்ததன் தாத்பரியம் புரியாமல் அவர் தவித்துக் கொண்டிருந்தார். மறுநாள் இரவு கனவில் விளக்கம் தரப்பட்டது. ''நீ கண்டது கௌதுனாவைத்தான். அவர்கள் உன் ஷெய்கின் தோற்றத்தில் உனக்கு தோற்றமளித்தார்கள். நீ உன் அகமியமான விசுவாசத்தில் குழப்பமடையாதிருக்கவே இவ்வாறு நிகழ்ந்தது'' என்ற விளக்கம் அவரை தெளிவடையச் செய்தது.

அன்பர்களே! இந்த கதையிலிருந்தவாறு, உங்களுடைய ஷெய்கும், கௌதும், உங்களது ரஸூலும் வெவ்வேறல்ல என்பதை நீங்கள்

உய்த்துணர முடிகிறதா? உங்களுடைய ஷெய்கின் தோற்றத்தில்தான் சத்தியம் உங்களுக்கு வெளியாகும். மஹ்ரிஃபாவின் சட்டம் இப்படித் தானிருக்கிறது.

தங்களை சூஃபிகளென்றும், தரீக்கத்துடையோரென்றும் பெருமை பேசித் திரியும் வீணர்களே! உங்கள் நீண்ட அங்கியிலும், தஸ்பீஹ் மணிக்கோர்வையிலும் ஞானம் இல்லை. சம்பூர்ணமான விஸ்வாசத் தாலும், சித்த சுத்தியாலும் உங்கள் நப்ஸின் கொட்டங்களை அடக்கி நீங்கள் ஜெயம் பெற்றுவிடுவீர்களானால் உங்களை ஞானிகள் எனலாம். அல்லாஹ்வின் மீதும், அவனது விதிவசத்தின் மீதும் நம்பிக்கையைத் தரிப்படுத்தியவர்கள் தங்கள் சர்வ காரியங்களையும் தங்கள் இறைவன் மீது பொறுப்புச் சாட்டியவர்களாகிவிடுவார்கள். அவர்கள் இதயமோ இணைவைப்பதிலிருந்து பரிபூரணமாக சுத்தமடைந்திருக்கும், தவ்ஹீத் என்னும் ஏகத்துவ தாத்பரியத்தில் நிலைபெற்றுவிடும். இவ்வடியானைக் காத்துக்கொள்ளும் பொறுப்பை இறைவன் ஏற்றுக்கொள்கிறான். ஈமான் தரிப்படும்போது யகீன் உறுதிப்படுகிறது. அவனிடத்தில் விலாயத்தின் ஜோதிக்கதிர்கள் வீசத் துவங்குகின்றன. பத்லிய்யா என்னும் அப்தால்களின் நிலையும் கைபிய்யா என்னும் குத்பிய்யத்தின் நிலையும் அவன் எய்துகிறான். இவையனைத்தும் அல்லாஹ்வின் மீதும், அவன் ரஸூலின் மீதும் நம்பிக்கை நிலைப்பெறுவதன் பயனேயாகும். இந்த படித்தரங்கள் அனைத்திலும் உயர்ந்தப் படித் தரத்தில் எம்பெருமான் (ஸல்) அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள்.

இன்ஸானாகிய மனிதன்ஆத்மீகப் பாதையில் அடையக்கூடிய படித்தரங்கள் ஏராளமாக உள்ளன. முஸ்லிம், மூமின், ஸாலிஹ், ஷஹீத், முத்தஹீத், முஹ்ஜஹித், வலி, அவ்தாத், அன்ஜாத், அப்தால், குத்ப், குத்புல் அக்தாப், கௌது, கௌதுல் அஃலம், தாபியீன், அஸ்ஹாபி, முஹாஜிரீன், அன்ஸாரீன், சித்திக்கீன். இப்படி இன்ஸானுடைய படித்தரங்கள் ஒன்றுக்கொன்று உயர்வாய் அமைந்துள்ளன. எம்பெருமான் முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைநேசர்கள், இறையடியார்கள், இறை தூதர்கள் ஆகியோர் அனைவரிலும் மேலானப் பதவியைப் பெற்று ஆன்மீக உலகில் அரசர்க்கரசராய் வீற்றிருப்பதை நீங்கள் மறுமையில் கண்கூடாகக் காண்பீர்கள். அவர்கள் நபி, ரஸூல், உலுல் அஜ்மு, ஹபீப், ஹாத்தமுன்னபீயின், ரஹ்மத்துல்லில்ஆலமீன், முஸ்தஃபா ஆகிய சிறப்புடையப் பதவிகளைப் பெற்றிருக்கிறார்கள்.

அவர்களிடத்திலே அழகிய முன்மாதிரி இருக்கிறது என்று அல்லாஹ் தன் மறையில் கூறியிருக்கிறான். வலிமார்கள், அப்தால்கள், குத்புமார்களின் சகல செயல்களும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்

முன்மாதிரியையே ஒத்திருக்கின்றன. கௌதுல் அஃலம் (ரலி) அவர்கள் தங்கள் ஆத்மீக உயர்வுப்பற்றிப் பேசுகின்றப் போதெல்லாம் ''இவைகளெல்லாம் இறைவன் எனக்களித்ததன் காரணம், நான் எம்பெருமான் (ஸல்) அவர்களை அதிகமதிகம் பின்பற்றி நடந்ததற் காகவும், என் தாய், தந்தை மீது அவன் கிருபை செய்ததற்காகவுமே அருளப்பட்டப் பேறுகளாகும்'' என்று கூறுகிறார்கள். அந்தோ! கை சேதமே! நீ யாரைப் பின்பற்றுகிறாய்? உன் செயல்களுக்கு யாரை நீ முன் மாதிரியாய் வைத்திருக்கிறாய்? ஷைத்தான்களும் பொய்யர்களும் தஜ்ஜால்களுமல்லவா உன்னை வழி நடத்துகிறார்கள்? மறுமையில் இருலோக ரட்சகரின் சந்நிதானத்தின் முன் நீ கொண்டுபோய் நிறுத்தப் படும்போது உன்னைக்கண்டு அவர்களின் கண்கள் குளிர்ந்திட வேண்டுமென்னும் ஆவல் உனக்கு இருந்திட வேண்டாமா?

சித்திக்கீன்களே! என் சொல்லுக்கு செவிமடுத்து அல்லாஹ்வின் பாதையில் விரைந்து நடக்க முன்வாருங்கள். நான் யார் என்பதை நீங்கள் அறிந்துக்கொள்ள முடியாது. நானோ சம்பூர்ணமாக்கப்பட்ட இரு ஆத்மீக மாமன்னர்களுக்கும் ஆன்மீக நேர் வாரிசாக இருக்கிறேன். அவர்கள் தேடியடைந்த ஞானப் பொக்கிஷங்கள் எனக்கு அன்பளிப்பாக தரப்பட்டிருக்கிறது. அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்களி லிருந்து பிரிந்த 14 பாட்டைகளின் ஞானங்களும் என்னிடம் சம்பூரணமாக வந்து சங்கமித்திருக்கின்றன. ஷெய்குல் அக்ரம் கௌதுனா முஹியிதீன் ஜீலானி ஆண்டகையின் திருப்பாதத்தை என் இதயத்தில் நான் ஏந்தியிருக்கிறேன். ஷெய்கு நாயகம் முஹம்மத் கவுது குவாலிரி அவர்கள் பற்பல திருநாமங்களைக் கொண்டு என்னைப் புகழ்ந்தார்கள். 'யாகாதிர் ஹமீத் குத்தீஸுல்லாஹ்' என்று மகத்துவம்மிக்க அருட் திருநாமத்தைக்கொண்டு இறைவன் என்னை விளித்திருக்கிறான்.

அன்பர்களே! வெளிப்படையாக அற்புதம் நிகழ்த்தும் குத்புகளின் வரிசையில் நான் இறுதி குத்பாவேன்! சற்குருநாதர் முஹம்மத் கவுது குவாலீரி அவர்களின் மூலமாக சகலவிதமான சித்துகளும், வித்தை களும் எனக்குப் போதிக்கப்பட்டிருக்கின்றன. அகிலத்தில் வழங்கும் தரீக்குகள் அனைத்தின் சித்தாத்தங்களும் என்னை வந்தடைந்துள்ளன. ரம்ஜ இல்மு என்ற நுட்பமான பிரபஞ்சக் கணக்கு என்னிடமே உள்ளது. மத்து, சத்து, ஹம்ஜி, சுக்கூன், நுக்கத்து என்ற இந்த ஐந்தே அடையாளங்களில் இப்பிரபஞ்ச முழுமையின் அறிவுகள் யாவும் அடங்கியிருப்பதன் இரகசியம் எனக்கு போதிக்கப்பட்டிருக்கிறது. பெருமைக்காக இவைகளை நான் கூறவில்லை. உங்களுக்கு உண்மை விளங்கும் பொருட்டு எடுத்தியம்புகிறேன்!

''விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வை சார்ந்து நில்லுங்கள்! அல்லது அவனளவில் சார்ந்து விட்டவர்களை சார்ந்து நில்லுங்கள்! நிச்சயமாக அவர்கள் உங்களை அல்லாஹ்வின் அளவில்கொண்டு சேர்ப்பார்கள்'' - என்ற ஹதீஸை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். அல்லாஹ் இப்பிரபஞ்சம் முழுவதையும் தனது அடியார்களைக் கொண்டே ஆட்சி புரிந்துவருகிறான். பிரயாசைக் கொண்டும், முயற்சியைக் கொண்டும் ஆத்மீகப் படித்தரங்களில் நீங்கள் முன்னேறு வீர்களானால் இந்த உண்மைகள் உங்களுக்கு நிதர்சனமாக விளங்கும். இறைநேசர்களுடையவும் இறைதூதர்களுடையவும் ஆன்மாக்களை நீங்கள் கண்முன் காண்பீர்கள். அல்லாஹ் உங்கள் உறக்க நிலையிலும், விழிப்பு நிலையிலும் உங்களுக்கு தஜல்லியாவான்.

அறிவீனர்களே! ஆதாயமில்லாத லோக பாசத்தில் சிக்கி உழலும் உங்களுக்கு இதைப்பற்றியெல்லாம் எங்கே தெரியப்போகிறது. இவ்வுலகின் ஆட்சியாளர்கள், அதிகாரிகள், பெருந்தனக்காரர்களின் வாசலில் வாயிற் காப்போனைப்போல் காத்துக்கிடக்கும் உங்களுக்கு ஆன்மீக உலகின் அற்புதங்களைப் பற்றிய அறிவு ஏற்படுவது அரிதுதான். உண்பதும், உடுப்பதும், விலங்குகளைப்போல் இன்பந் துய்ப்பதும் உங்கள் கடமையென எண்ணி அலைகிறீர்கள். சுயநலமாக ஒருவரையொருவர் ஏமாற்றிக்கொண்டும், பொய்ப்பேசிக் கொண்டும் திரிகிறீர்கள். அந்தோ கைசேதமே! மரணத் தூதுவர் உங்களைத் தேடிவரும்போது என்செய்வீர்கள்?

'மனிதர்கள் உறங்குகிறார்கள். மரணம் வரும்போது விழித்துக் கொள்வார்கள்' என்று நாயகம் திருமேனி(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். ஆனால் அவ்விழிப்பு சில நொடிகளே நீடிக்கும். அதன்பின் நீங்கள் இருளுக்கு மேல் இருள் சூழும் நரகப்படுகுழியில் தள்ளப்பட்டுவிடுவீர்கள். இறைவனுக்கு அஞ்சுங்கள்! உங்கள் பொழுதுபோக்கு தனத்தைவிட்டு மீளுங்கள். தௌபாவே பிராந்தனையில் மேலானது.

உங்களில் சிலர் ஏகத்துவத்தை உணர்ந்து விட்டதாக இறுமாப்புக் கொண்டு பாவமன்னிப்பு தேவையற்றது என்று கருதுகிறீர்கள். ஆனால் அல்லாஹ்வின் திருதூதர், மனிதர்களில் சிரேஷ்டர் ரஸூல் (ஸல்) அவர்கள் ஒரு நாளைக்கு 70 தரம் பாவமன்னிப்புக் கேட்டு வந்தார்கள். பாவா ஆதம் (அலை) அவர்கள் சுவனத்திலிருந்து தூக்கியெறியப்பட்டு இந்த பூமிக்கு வந்த பின் பச்சாதாபப்பட்டு தமது பாவத்திற்காக இறைவனிடம் மன்னிப்புக் கோரினார்கள்.

இறைவன் அவர்களிடம் வினவினான். ''ஆதமே! நாமே எல்லா வற்றிற்கும் காரணம். உம்மையும், உமது மனைவியையும் விருட்சத்தின் பக்கம் போக வேண்டாமெனத் தடுத்ததும் நாம்தான். வழி கெடுக்கும் இப்லீசை அனுப்பி, உமது மனைவிக்கு ஆசையை உண்டு பண்ணி அதன்மூலம் விலக்கப்பட்டக் கனியை நீரும், அவளும் உண்ண வேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளாக்கியதும் நாம்தான். நடப்பதெல்லாம் நம்மால்தான், என்ற ஞானமும் உமக்கு நாம் உண்டாக்கியிருக்க நீர் மன்னிப்புக் கோருவானேன்?'' அதற்கு பாவம் ஆதம் (அலை) அவர்கள், ''இறைவா! நடந்ததனைத்தும் உன்னால்தான் நடந்ததென நானறிவேன். எனினும் நீயோ எனது எஜமானன். நான் உனது அடிமை! உன் எஜமானத்துவத்திலிருந்து நீ எது வேண்டுமானாலும் செய்யலாம். என் அடிமைத்துவத்தின் பண்புடன் மன்னிப்புக்கோருவதே என் கடமை. என்னை மன்னித்துவிடு!'' என்றார்கள். வல்ல இறையோன், ''ஆதமே! உம்முடைய இந்த அழகிய குணத்திற்காக உம்மை மன்னித்தேன்'' என்றான்.

பொய்யர்களே! ஏதோ ஞானம் முற்றிப் போய்விட்ட முத்தர் களைப் போல் வேஷம் போடுகிறீர்கள். ஏவலும் விலக்கலும் உங்களுக்கு இல்லையென ஆகிவிட்டதாக பகற்கனவு காண்கிறீர்கள். உங்கள் பாவங்களுக்காக வருந்துவதை மறந்து, எல்லாம் அவனால் என்ற இறுமாப்போடு அமர்ந்திருக்கிறீர்கள். தௌபாவின் பாதையில் நீங்கள் நடக்காத வரை உங்களுக்கு வெற்றி கிடைக்கப்போவ தில்லை. உங்களுடைய ரஸூலை உங்களுக்குள் வைத்து, உங்களுடைய நானென்பதை மற்றிலும் அழித்துவிடுங்கள். உங்களுடைய ரஸூலின் யதார்த்தத்திலிருந்தபடி பாவமன்னிப்புக் கோருங்கள். நீங்கள் மன்னிக்கப்பட்ட ஜெயிலர்களாக மாறுவீர்கள்!

அகமிய ஞானத்தை என் வாசகத்தின் மூலம் உள்ளங்கை நெல்லிக்கனிப் போல உங்களுக்கு வழங்கியுள்ளேன். சகவாச தோஷத்தால் வீணர்களாகிப் போகாதீர்கள். அல்லாஹ்வின் நல்லடியார்களில் ஆக வேண்டுமென சதா முயற்சி செய்யுங்கள். கௌதுல் அஃலம் (ரலி) அவர்கள் ''அல்லாஹும்ம அஜ்கல்னி பித்துன்யா வல் ஆகிரத்தி மின் அஹ்லில் விலா யத்திக'' - ''இறைவா! இவ்வுலகிலும், மறுமை யிலும் என்னை உன் நேசர்களாகிய வலிமார்களுடையக் கூட்டத்தில் சேர்த்தருள்'' என்று அடிக்கடி துஆ செய்து வந்தார்களாம். உங்களுக்கு நற்புத்தியிருக்குமாயின் ஆண்டகை அவர்களைப் பின்பற்றி எந்நேரமும் நல்லோருடைய சகவாசத்திலும், சத்முயற்சியிலும் இருந்துவாருங்கள்!

நாயகனே! உனது ஹபீபாகிய முஹம்மது (ஸல்) அவர்களின் பொருட்டு எங்கள் பாவங்களனைத்தையும் மன்னித்துவிடு! பரிசுத்தமான உனது திருநாமங்களின் அருட்கொடைகளை எங்களுக்கு திறந்துவை! உனது நல்லடியார்களின் சகவாசத்தைத் தந்தருள்! உனதுபாதையில் நடக்கும்வாய்ப்பு, வசதிகளையும், சாதனங்களையும் தந்தருள்! கிருபையாளனே! எங்கள்மீது கருணைக்காட்டு! இறைவா! புகழனைத்தும் உனக்கே உரியது! ஸலாமும், ஸலவாத்தும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பேரிலும் அன்னாரின் கிளையார், கோத்திரத்தார், தோழர், கூட்டத்தார் மீதும் என்றென்றும் உண்டாகுவதாக!

மேலைநாகூர் பள்ளிவாசலில் ஆற்றிய சொற்பொழிவு.

மேலைநாகூர் பள்ளிவாசலில்

*மூ*மினானவனே!

அல்லாஹ் உன்னை சிருஷ்டிகளிலெல்லாம் மேலான சிருஷ்டியாய் படைத்திருக்கின்றான். அவன் அருட்கொடைகள் உனது உயிரிலும், உடலிலும், அதன் உறுப்புகளிலும் பரிணமித்து அவனது காருண்ய குணத்தை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. நீயோ அவனது இரட்சகத் தன்மையில் நம்பிக்கையற்றவனாகவும் இருந்துவருகிறாய். ''நன்றிக்கு நன்றியேயன்றி கூலியுண்டா?'' என்ற திருவசனத்தை ஆராய்ந்ததுண்டா? ''நான் மனிதனுக்கு இஹ்ஸான் செய்தேன். அவன் எனக்கு இஹ்ஸான் செய்வதை எதிர்பார்க்கிறேன்'' என்று இறைவன் கூறுவதாக ஹதீஸ்குத்ஸியிலே வந்திருக்கிறது.

ஹதீஸ் என்பதென்ன, தலீல் என்பதென்ன, ஹதீஸ் நபவி, ஹதீஸ் குத்ஸி என்பதென்ன என்று கூட தெரிந்துக்கொள்ள விருப்பமில்லாத நீ இவைகளையெல்லாம் எங்கே நோட்டமிடப்போகிறாய்? வானவர் ஜிப்ரயீல் (அலை) அவர்களின் மூலமாக அல்லாஹ் தன் திருத்தூதருக்கு வெளியாக்கியவையே 'வஹீ' என்னும் மெய்வெளிப்பாட்டு தலீலின் வசனங்களாகும். அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் திருவாக்குகளே ஹதீஸ்களாகும். ஹதீஸுன் நபவி எம்பெருமான் (ஸல்) அவர்களின் செயல்கள் குறித்து அஸ்ஹாபிகளாகிய தோழர்கள் கூறியவைகளாகும். வானவர் எவரின் இடை துணையின்றி இறைவன் தன் திருநபிக்கு நேர்முகமாக கூறியவைகளே 'ஹதீஸில் குத்ஸி' என்பதாகும். ஹதீத் குத்ஸியின் மகத்துவம் இப்போது விளங்குகிற

தல்லவா? ஆனால் சிலர் ஹதீஸ், தலீல் மட்டுமே போதும் மற்றவை சந்தேகமானவை என்று ஒதுக்குகின்றனர்.

மனிதன் தனக்கு இஹ்ஸான் என்னும் நன்றி செய்வதை எதிர்பார்க்கிறேன் என்று அல்லாஹ் கூறியதன் தாத்பரியம்தான் என்ன? அல்லாஹ்வுக்கு மனிதன் எப்படி நன்றி செய்ய முடியும்? ''நீ முன்னர் அவனது இரகசியமாக இருந்தாய். அவன் இன்று உனது இரகசியமாய் இருக்கிறான். உன்னில் அவனை நீ பகிரங்கப்படுத்துவதே அவனுக்கு நீ செய்யும் நன்றியாகும்'' என்பது பெரியோர்கள் முடிவாகும். ''தஹல்லகு பி அஹ்லாக்கில்லாஹி'' 'அல்லாஹ்வின் குணங்கொண்டு நீங்கள் குணங்கொள்ளுங்கள்' என்ற அருள்வாக்கை சற்று சிந்தித்தால் இந்த உண்மை உங்களுக்குப் புலப்படும்.

புனித கஃகுபாவில் ஒரு மனிதர் புகுந்து இறைவனை வணங்குவதிலேயே காலங்கழித்து வந்தார். அம்மனிதருடைய மகிமையை உணர்ந்த ஒரு வியாபாரி இரண்டு ரொட்டிகளை அவ்வணக்கவாளருக்கு தருவதை வழக்கப்படுத்திக்கொண்டார். அவரும் அதனை தினமும் உண்டு நோன்புத் திறப்பார். இவ்வாறு நாட்கள் கழிகையில் ஒரு நாள் அந்த ஆபிதின் நப்ஸ் அவரை முன்னோக்கி 'நீ எவ்வளவு கீழானவனாக இருக்கிறாய். நீ எவ்வளவு வணங்கி என்ன செய்ய? உண் உணவுக்காக நீ அல்லாஹ்வை எதிர்பாராமல் ஒரு வியாபாரியை எதிர்பார்க்கும் ஈன புத்தியுள்ளவனாகி விட்டாயே' என்று கேவலமாகப் பேசியது.

அந்த ஆபிதுக்கும் நப்ஸின் கருத்து சரியென்றே தோன்றியது. அன்று மாலையிலிருந்தே அந்த வியாபாரியின் ரொட்டியை ஏற்க அவர் மறுத்துவிட்டார். சில நாட்கள் வரை அந்த ஆபிதுக்கு உணவுக்கு வழியின்றிப் போகவே பசியால் துன்புற்ற அவர் இறைவனிடம் மன்றாடினார். இரவில் ஒரு கனவு கண்டார். அல்லாஹ்வின் சந்நிதானத்தில் அவர் நிறுத்தப்பட்டிருந்தார். அவர்தன் பசிக்கொடுமையை எடுத்தோதவும் இறைவனிடமிருந்து ''அப்தே! உனக்கு அன்றாடம் இரண்டு ரொட்டிகளைக் கொடுக்க எனது அப்தாகிய ஒருவரை ஏற்பாடு செய்திருந்தேனே, ஏன் நீ மறுத்தாய்?'' என்ற குரல் வந்தது. ஆபிதோ தனது நப்ஸின் கூற்றை எடுத்து விளக்கினார். மீண்டும் இறைவன், அப்படியாயின் உனக்கு உணவளித்து வந்தது யாரென்று நீ நினைத்தாய் என்றான் அவர் நீ தான் என்று பதிலளித்தார். ''அவ்வாராயின் வியாபாரி மூலம் கிடைத்து வந்ததை நீ மறுத்து வந்தது முறைதானா?'' என்ற இறைவனின் கேள்விக்கு பதில் கூற முடியாமல் அவர் திகைத்து நின்றார்.

அந்த கனவு தொடர்ந்தது. இறைவனின் சன்னிதானத்துக்கு, ஆபிதுக்கு ரொட்டி கொடுத்து வந்த வியாபாரி வந்து நின்றார். "என், அப்தே, இந்த ஆபிதுக்கு நீ கொடுத்து வந்த ரொட்டியை ஏன் நிறுத்தினாய்?" என்ற வினா அசரீரியாக எழுந்தது. அந்த வியாபாரியோ, "எல்லாமறிந்தவன் நீ! நடந்ததெல்லாம் நீயே அறிவாய்!" என்று வினயமாக பதிலளித்தார். இறைவன், "அப்துல் நீ யாருக்கு உணவளித்து வந்தாய்?" என்று வினவினான் "நாயகனே! நான் அளித்தது உனக்கே" என்றார் வியாபாரி "அவ்விதமாயின் இனி தொடர்ந்து அந்த அப்தாகிய நேசருக்கு உணவளித்து வா" என்றான் இறைவன். அந்த கனவும் கலைந்தது.

அன்பர்களே! நீங்கள் கொள்வதும், கொடுப்பதும் கூட அல்லாஹ்வுக்காக என்ற புனித நிலைக்கு உயர்ந்து வந்துவிடுங்கள். நீங்கள் இறைவனுக்கு இஹ்ஸான் செய்வதின் தாத்பரியம் நான் சொல்லிக்காட்டிய இச்சம்பவத்தில் பொதிந்துக் கிடக்கிறது. நீங்கள் சிந்திப்பவர்களாயிருந்தால் உண்மையை நோட்டமிடுங்கள். திருத்தூதர் மூசா (அலை) அவர்கள் முன் இறைவன் தன் ஜோதியைக் கொண்டு தோற்றரவானான். "மூசாவே! மிஸ்ரிலுள்ள உம்முடைய சமூகத்தாரிடம் சென்று, அவர்களை துன்பத்திலிருந்தும், கஷ்டத்திலிருந்தும் விடுதலை செய்வதற்காக அந்நாட்டைவிட்டு அழைத்துவாரும்" என்று இறைவன் கூறினான். ஹலரத் மூசா (அலை) அவர்களோ "இறைவா! உன்னை யாரென்று நான் அவர்களுக்கு கூறுவது" என்றார்கள். இறைவன் "மூசாவே, நான் உங்கள் மூதாதைகளின் இறைவனாவேன். நான் யாராயிருக்கிறேனோ அவன்தான் நான் என்று அவர்களிடம் எடுத்தோதும்" என்றான்.

அல்லாஹ்வுக்கன்றி நான் என்பது நம்மில் யாருக்கும் உரித்தான தல்ல. அல்லாஹ்வானவன் இன்ஸானில் தன்னை அறியாதவனைப் போல நடித்துக் கொண்டிருக்கிறான் என்பதாக மெய்யறிவாளர் இபுனுல் அரபி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். நீங்கள் நோட்ட மிட்டுப் பார்ப்பீர்களானால் உண்மையை விளங்கிக்கொள்ள முடியும். அவ்வாறு விளங்கிக் கொள்வதைக் கொண்டுதான் உங்களுக்கு ஃபனா - என்ற நிலை சித்தியாகும். இதனையேதான் எம்பெருமான் (ஸல்) அவர்கள், 'மூத கப்ல அன்தமூத்' மரணம் வருமுன் மரணித்து விடுங்கள் என்று உபதேசித்தார்கள்!

"குளிப்பாட்டுவர்களின் கையில் கிடக்கும் மையித்தைப் போலும், பாலூட்டும் தாதியிடம் கிடக்கும் குழந்தையைப் போலும், குதிரைமீது

ஊர்ந்து வரும் போலோ விளையாட்டுக்காரனால் அடிக்கப்படுபவற்கு தயாராக நிற்கும் பந்தைப் போலும் இறைவனின் தக்தீரின் கைகளில் நீ ஆகிவிடு" என்று சற்குருநாதர் மஹ்பூப் புகாரி (ரலி) அவர்கள் உபதேசிக்கிறார்கள். இதுதான் ஃபனா என்ற நிலையின் விளக்கமாகும். மேலும் இது பற்றி நீ தெரிந்துக்கொள்ள உசாவுவாயின் தெரிந்துக்கொள். முதன்முதலாக பாவத்திலிருந்து நீ விடுதலைப் பெற வேண்டும். சகலமும் இறைவன் புறத்திலிருந்து நடைபெறுவதால் இப்பிரபஞ்சத்தில் யாவும் சரியாக நடைபெறுகின்றன. உன்னுடைய செயல்கள் உன்னிலிருந்து எழுவதாக நீ எண்ணியிருப்பது உனது முதற்பாவ மாகும். இந்த பாவத்திலிருந்து நீ விடுதலைபெறு.

இறைவனே எல்லா காரியங்களுக்கும் காரியஸ்தனாக யிருக்கிறான் என்பதை உய்த்துணர்ந்து காரியங்களிலிருந்து நீ விடுதலைபெறு.

இறைவன் தன்னையே உன் கண்களின் வழியாக பார்ப்பவனாக இருப்பதால் பார்க்கப்படுவதும், பார்ப்பவனும் இறைவன் என்பதில் மூழ்கி, உன் பார்வை என்பதிலிருந்து நீ விடுதலை பெறு.

உனக்கு 'தான்' தன்மை என்பது ஒன்றில்லை. அது இறைவனுக்கே உரியதென்பதை உணர்ந்து உன் தான் தன்மையிலிருந்து விடுதலை பெறு. எதார்த்த உண்மையேயன்றி இவ்வுலகம் என்பது ஒன்றில்லை என உணர்ந்து இவ்வுலகின் கவர்ச்சியிலிருந்து விடுதலைபெறு. இப்படி படிப்படியாக முன்னேறி ஃபனாவுல் ஃபனா எனும் நிலைக்கு நீ வர வேண்டும். நீ உன்னை ஃபனா செய்துள்ளாய் என்பதையும் மறந்துவிடுவதுதான் ஃபனாவுல் ஃபனா என்பதாகும்.

அன்பனே! சகலவற்றையும் திரஸ்கரித்து சத்திய நிலைக்கு எய்தியிருந்த இறைநேசர் அபாயஜீத் பிஸ்தாமி அவர்களை ஒரு மனிதன் அடுத்து வந்து, "அன்பரே, தாங்கள் யார்?" என்று வினவினான். அவர்கள் சிறிதும் தாமதியாது, "நான் அல்லாஹ்!" என்றார்கள். அம்மனிதன் திகைத்துப்போய், "தாங்கள் அபாயஜீத் அல்லவா?" என்றான். அவர்கள் சற்று நிதானித்து, "நன்று சொன்னாய் மகனே! நான் அபாயஜீத்தான் என்றார்கள்" அவர்கள் சொன்னது மெய்யேதான். அல்லாஹ்வில் தன்னை ஃபனாவாக்கி 'தன்னை' மறந்த நிலையில் "நான் அல்லாஹ்" என்றார்கள். அதனை யாரே மறுக்க முடியும்? இதுதான் ஃபனாவின் அதிவுச்ச நிலையாகும். ஆனால் இறை தூதர் மூசா (அலை) வை எதிர்த்த பிர்அவ்னும் கூட, "நானே உங்கள் இறைவன்" என்று கூறினான். ஆனால் இரண்டிற்குமுள்ள வேற்றுமையை உணர முற்படுங்கள். ஃபிர்அவ்னின்

முடிவை கவனியுங்கள். எனவே, ஆழ்ந்து சிந்தியுங்கள். வீணான வாய் பிதற்றல் உண்மையான ஃபனா நிலை ஆகாது.

இறைநேசர் ஜுனைதுல் பக்தாதி அவர்களை அடுத்து ஒரு மனிதன், "ஆபிது என்றால் யார்?"என்று கேட்டான். "எவன் தன்நிலையை வெளிப்படுத்தாமலும், மவுனியாகவுமிருக்கிறானோ அவனே ஆபித்" என்றார்கள். எனவே உன் வாயிலிருந்து ஞான அகமியங்களை உடைப்பதினின்றும் உன் நாவைப் பேணிக்கொள். மூடிய சிப்பியுனுள்தான் முத்து உருவாக முடியும்.

பிறர் குற்றங்களைப் பற்றி சதா நேரமும் சிந்தித்துதன் உள்ளத்தை அழுக்காக்கிக் கொள்வதை விட, தன்னைப் பற்றியே அதிகம் சிந்தியுங்கள். ஒருவனைப் பற்றிப் புறம் பேசுபவன் அவன் மாமிசத்தை உண்ணுகிறான். என்ற நபிமொழியை நினைவில் கொள்ளுங்கள். உண்டு, உடுத்து விளையாடி வீணே காலங்கழியாதீர்கள். இவ்வுலகின் சுகங்களெல்லாம் மரணம்வரின் ஒரு நொடிப் பொழுதில் கானல் நீராக மாறிவிடும். மறுமையை நாடுபவன் மறுமையையும் அடைந்து இம்மையையும் பெறுகிறான். இம்மையை நாடுபவனோ இம்மை யிலும் நஷ்டப்பட்டு, மறுமையையும் இழந்து விடுகிறான்' என்று ஒரு நபிமொழி கூறுகிறது. நீங்களோ இவ்வுலகைத் தேடுவதிலேயே வாழ்நாளை கழித்துவிடுகிறீர்கள். அந்தா கைசேதமே! உங்கள் இழிநிலையை காண்கின்றபோது என் இதயம் வருந்துகிறது. அல்லாஹ் வினவில் முகம் திரும்புங்கள் என்றழைத்தால் கேலி செய்கிறீர்கள். சிருஷ்டி, தான் ஏன் சிருஷ்டிக்கப்பட்டோம் என்றும், பிறந்தவன் நாம் ஏன் பிறந்தோம் என்றும் சிந்திக்க வேண்டாமா?" என்று காஜா ஜுனைத் பக்தாதி அவர்கள் கேட்கிறார்கள்.

நாம் ஏன் பிறந்தோம்? என்ற சிந்தனையேயில்லாமல் உழல் கிறீர்களே! அனறாடம் உண்டு, உறங்கி, இனவிருத்தியிலும் ஈடுபடும் விலங்குகளுக்கும், உங்களுக்குமிடையில் என்ன வேறுபாடுதான் உள்ளது? உலக சம்பத்துக்களையும், செல்வங்களையும் பெற ஓடியவாறிருக்கிறீர்கள். அப்பேராசைகளைக் கொன்றுவிட்டு, பரிசுத்த உள்ளத்தோடு இறைவன் சன்னிதானத்திற்கு வருவதெப்போது? உங்களுடைய கீழான இச்சைதான் உங்களுக்கும், இறைவனுக்கும் தடைச்சுவராக இருக்கிறது. அந்நப்ஸைப் பணியவைத்த பின்னரே, 'இத்மினான்' எனும் இறைவனின் கடாட்சம் உங்களுக்கு சித்தியாகும். சிரேஷ்ட ஞானவான்கள் பகல் முழுதும் தங்கள் குடும்ப வாழ்க்கைக்காகவும், பிறசிருஷ்டிகளின் நன்மைக்காகவும் பாடுபடு கிறார்கள். இருள் சூழ்ந்து இரவு கவிழ்ந்தும் ஒரு மூலையிலமர்ந்து

இறைவனின் வணக்கத்தில் ஈடுபட்டுவிடுகிறார்கள். இவர்கள் மீதுதான் இறைவன் தன் கிருபாகடாட்சத்தைப் பொழிகிறான். நீங்கள் புனிதர் களாக திருந்த வேண்டும் என்பதற்காகவே இறைவனின் மெய்யான மார்க்கத்தின் மர்மங்களையெல்லாம் உங்கள் முன் தடையின்றி விளக்குகிறேன்.

'லா யஜாலுஅப்தி யதகர்ரபு இலய்ய பின்னவாஃபுலி ஹத்தா அஹ்ப்பது ஃப இதா அஹ்ப்பது குன்து ஸம்அஹுல்லதி யஸ்மஉ பிவம்ஷரணுல்லதி யம்ஷுபிஹா, - என் அடியான்தன் நபிலான வணக்கங்களால் என்னை நெருங்கும்போது அவனை நான் நேசிக் கிறேன். பின்பு அவன் கேட்கும் காதாகவும், அவன் பார்க்கும் காலாகவும் நானாகிவிடுகிறேன்' - என்று அல்லாஹ் ஹதீஸ் குத்ஸியிலே கூறியுள்ளான்.

வணக்க, வழிபாடுகளில் மூழ்கி நீங்கள் அவனை நெருங்கி விடுவீர்ளானால், 'வமா ரமய்த இத் ரமய்த' - எதிரிகளில் மீது மண்ணை நீர் எறியவில்லை, நானே எறிந்தேன்" என்ற இறை வசனம் போலவே உங்கள் செயல்களனைத்தும் இறைவனின் செயல்களாகிவிடும். இதைவிட பெரிய பாக்கியம் எது? இம்மை, மறுமையிலுள்ள எந்த லாபமும் இதற்கு ஈடாகுமா? 'இவ்வுலகின் ஆசை ஏற்பட்டால் ஒலு செய்து தூய்மை கொள்வேன். மறுமையின் ஆசை வந்தாலோ குளித்துவிடுவேன்' - என்று ஒரு பெரியார் கூறியுள்ளார்கள். இம்மை, மறுமை ஆகிய இரண்டையும் விட்டு யாவற்றுக்கும் மூலகர்த்தனான அல்லாஹ்வை நேசியுங்கள்.

ஒருநாள் வானவர் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் எம்பெருமான் (ஸல்) அவர்களின் சமூகத்திற்கு வஹி கொண்டு வந்தார்கள். எம்பெருமான் (ஸல்) அவர்களோ அந்நேரத்தில் கண்ணாடியில் முகம் பார்த்து தலை வாரிக் கொண்டிருந்தார்கள். வந்த வஹியை ஏற்றுக் கொண்ட அண்ணலர்(ஸல்) அவர்கள், "ஹலரத் ஜிப்ரயீலே, அல்லாஹ் இப்போது என்ன செய்துக் கொண்டிருக்கிறான்" என்று வினவினார்கள். அதற்கு வானவர் கோமான் அவர்கள், "இறைதூதரே! அல்லாஹ்வை நான் கண்டதில்லை. அவன் சன்னிதியிலிருந்து இருபதாயிரம் திரைகளுக்கப்பாலிருந்தே நான் வஹியை ஏற்று வருகிறேன்" என்றார்கள். "வானவர் கோனே, இன்று நீர் அத்திரைகளை நீக்கிப் பாரும்" என்றார்கள் இறைதூதர் அவர்கள். ஜிப்ரயீல் அவர்களும் பேரார்வத்தோடு அர்ஷை அணுகி, அதன் திரைகளை நீக்கி அல்லாஹ்வின் சன்னிதியை நோக்கிய போது திடுக்கிட்டுப் போனார்கள். ஏனெனில் அங்கு நின்றிருந்தது அண்ணலெம்பெருமானார் (ஸல்)

அவர்களேதான். இவ்வளவு வெட்ட வெளிச்சமாக உங்கள் முன் வைக்கப்பட்ட உண்மையை ஆய்ந்து நல்லறிவு பெறுங்கள்.

சூபிக்கவிஞர் பரீதுத்தீன் அத்தார் அல்லாஹ்வுடைய சந்நிதானத்தைக் குறிப்பிடும்போது, 'இச்சன்னிதானம் விசித்திரமானது. இங்கு யார்வரினும் அங்கு அவர்கள் தன்னையே காண்கிறார்கள்' - என்று மர்மத்தை விளக்குகிறார்கள். மாசுப்பட்டுக் கிடக்கும் உங்களுடைய இதயக் கண்ணாடியை சுத்தப்படுத்துங்கள். அல்லாஹ்வின் லிகாவென்னும் தரிசனத்தை காண்பீர்கள். காலம் கடுகி விரைந்துச் செல்கிறது. மெய்யன்பர்களே விழித்தெழுங்கள்.

இறைவா! உனது சந்திப்பென்னும் பாக்கியத்தை எங்களுக்குத் தந்தருள். வீணர்களின் கூட்டத்தில் எங்களை சேர்த்து விடாதே!

★★★

அந்திமக் காலத்தில் நாகூரில் தங்கள் இருப்பிடத்தில் திருக்கூட்டத்தாருக்கும் இசுலாமியப் பொதுமக்களுக்கும் ஆற்றிய சொற்பொழிவு.

நாகூரில் ஆற்றிய சொற்பொழிவு

அன்பர்களே!

நல்லறிவாளர்களுடைய சகவாசத்தை தேடியடையுமாறும் அல்லாஹ்வுடைய அடியார்களின் அடக்கஸ்தலங்களுக்குச் சென்று ஜியாரத் செய்யுமாறும் உங்களுக்கு இதோபதேசம் செய்கிறேன். நல்லடியார்களுடைய அடக்கஸ்தலங்களுக்குச் சென்று ஜியாரத் செய்வதால் உங்களுடைய காரியங்கள் செவ்வைப் பெறும். ஷரீ அத் என்னும் சட்டநியான அனுஷ்டானங்களை ளாஹிரான கல்வியையுடைய ஆலிம்களிடமிருந்தும் தரீக்கத்தின் ஞானங்களை ஷெய்குமார்களிட மிருந்தும் கற்கின்ற நல்லடியான் ஹக்கிகத்தான விளக்கங்களை நல்லடியார்களின் தலங்களிலிருந்துதான் இல்ஹாமின் வாயிலாக அடையமுடிகிறது. எனவேதான் உங்களுடைய காரியங்கள் செவ்வைப் பெற அடியார்களுடைய கபுர்களை தரிசிக்குமாறு உபதேசிக்கிறேன்.

"எவனொருவன் என் ஒலியைப் பற்றி புறம் பேசுகின்றானோ அவனுக்கெதிராக போர்தொடுக்க வாளை உயர்த்திவிட்டேன்" என்று

ஏக நாயன் மொழிவதாக ஹதீஸ் கூறுகிறது. மௌட்டீகமான உங்கள் உலக ஞானத்தால் எடைப்போட்டு அடியார் அவர்களைக் கொண்டே அடைப்பதையும், திறப்பதையும், நடத்தாட்டுகிறான் என்றும், இவ்வுலகம் செவ்வையாய் நடைப்பெறுவதும் அவர்களைக் கொண்டு தான்" என்றும் ஞானிகள் கோமான் முஹியித்தீன் ஆண்டகையவர்கள் அருள்புரிந்திருக்கிறார்கள். எனவே அடியார்களை நாடிச் செல்வதை மறுக்கும் விதண்டா வாதத்துக்கு செவி சாய்க்காதீர்கள். "அல்லாஹ்; அவன் ஏகன்; எங்கும் நிறைந்தவன் - யாரையும் பெறாதவன் - யாராலும் பெறப்படாதவன் அவனைப் போன்று இணையாகவும் யாருமில்லை" என்று திருமறை ஏகனை வர்ணிக்கிறது.

ஏகனாகிய அவனை ஒன்றுப்படுத்தி வணங்கும் விஷயத்தில் நீங்கள் சிந்திக்க வேண்டியுள்ளது. தெளிவான இல்ஹாம் உதிக்காத வரை இந்த ஒன்றுப்படுத்துதலிலிருந்து நீங்கள் சருகிவிழ நேரிடும் இத்தகைய நேரங்களில் நல்லடியார்களின் தரிசனமே உங்களுக்கு கைக்கொடுக்கும்.

"தஹயர்த்தும் பில் உமூரி பஸ்த்தயீனூமின் அஹலில் குபூரி - கருமங்களில் திகைப்படைந்துவிடுவீர்களேயானால் கபுருகளை உடைய அவ்லியாக்களைக் கொண்டு உதவி தேடிக் கொள்ளுங்கள்" என்று எம்பெருமான் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே நீங்கள் இம்மை, மறுமை காரியங்களில் திகைப்படைவீர்களேயானால் அடியார்களுடைய வாசலை நோக்கிச்செல்லுங்கள்.

அடியானின் கல்பில் அல்லாஹ் ஸிர்ராக இருக்கிறான். அடியானது சிந்தை எனும் புத்தி அவனுடைய தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் தலமாகயிருக்கிறது. யாவும் அல்லாஹ்வைக் கொண்டே நடைபெறுகிறது. உன்னில் உதிக்கும் உதிப்புகள் யாவற்றுக்கும் அவனே மூலகர்த்தன். ஆனால் அல்லாஹ் அவனது திருதூதரின் மூலம் நன்மையையும், தீமையையும் பிரித்தறிவித்துவிட்டான். எனவே உனது புத்தியை பயன்படுத்தாமல் உன் நாட்டத்தில் வந்ததெல்லாம் அல்லாஹ்வின் உத்திரவு என்று உளறாதே. அடியானின் இதயசுத்திக்கேற்ப அவனுக்கு தஜல்லியும் இல்ஹாமும் ஏற்படுகிறது.

நப்ஸே அம்மாராவின் தஜல்லி கருப்பு நிறமாயிருக்கும். முதுகுக்குப் பின்னாலிருந்து மஞ்சள் நிறமாக வீசும் ஒலி ஷைத்தானின் ஒளியாகும். வலது தோளின் புறமாக பசுமையாக வீசும் ஒளி ஷெய்கின்

ஒளியாகும். முன்புறமாக வரும் வெண்ணிற ஒலி ஆன்மாவின் ஒளியும், நிறமற்ற ஒளி அல்லாஹ்வின் ஜோதியுமாகும்!

பாரசீக ஞானி ஸுஃபி பரீதுத்தீன் அத்தார் (ரலி) அவர்கள் திருகுர்ஆன் வசனங்களுக்கும், ஹதீஸ் மொழிகளுக்கும் அடுத்தப்படி ஞான குருநாதரின் போதனை மொழிகளே அந்தஸ்து வாய்ந்தது என்று கூறுகிறார்கள். மேலும் ஞானபோதகரின் பொன்மொழிகள் திருகுர்ஆனின் விளக்கவுரையாகவும், ஹதீஸின் தெளிவுரையாகவும் இருக்கக் காண்பீர்கள் என்றும் கூறுகிறார். மஹ்பூபே இலாஹி ஹாஜா நிஜாமுத்தீன் கூஸ்தி (ரலி) அவர்கள் தங்கள் கலிஃபாவை நோக்கி ''அமீர்குஸ்ரூ, ஷெய்குமார்களின் பொன்மொழிகளையும் போதனைகளையும் அன்றாடம் படித்து வாரும்!'' என்றார்கள்.

மெய்யன்பர்களே! அல்லாஹ்வின் நல்லடியார்கள் சகவாசத்தால் உங்களுக்கு ஏற்படும் பலன் இவ்வளவுதான் என்று வரையறுத்துக் கூறமுடியாது. ஹஜ்ரத் ஸாலிஹ் (அலை) அவர்கள் ''எவரொருவர் அல்லாஹ்வின் நல்லடியாரை நினைவு கூருகிறாரோ அவர் மீது இறையருள் பொழியப்படுகிறது! உங்களுடைய முடிவு அவர்களுடைய முடிவைப் போல் ஆவதற்காக அவனுடைய நல்லடியார்களை நினைவுக் கூர்ந்திடுங்கள்'' - என்றும் கூறியுள்ளார்கள்.

பேரரசர் சுல்தான் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரலி) அவர்கள் ஒரு நள்ளிரவில் அற்புதமான கனவொன்று கண்டார்கள். ஒரு வானவர் முழுநிலா ஒளியில் நின்று நீட்டோலை ஒன்றில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். அரசர்க்கரசர் அவரை அணுகி, என்ன எழுதுகிறீர்கள்? என்றார். வானவர், 'அல்லாஹ்வின் நேசர்களின் பெயரை வரிசைப்படுத்திக் கொண்டிருக்கிறேன்' என்றார். 'என் பெயர் அதிலுண்டா?' என ஆவலுடன் அரசர் பெருமான் வினவ, இல்லையென கைவிரித்தார் வானவர். மன்னரோ, 'அப்படியாயின் அல்லாஹ்வின் நேசர்களுக்கு நேசன் என்றாவது பதியுங்கள்' என்றார்கள். கனவு கலைந்தது. மறுநாள் இரவும் மீண்டும் அந்த வானவரை கனவில் கண்டு அரசர் கோமான் அவரை அடுத்துச் சென்று வானவரின் கையிலிருந்து இறைநேசர் பட்டியலின் ஓலையை கண்டு சொல்லவொண்ணா வியப்புக்கு ஆளானார்கள். இது எங்ஙனம் நிகழ்ந்தது? அல்லாஹ்வின் திருப்தி என்பது அவனது அடியார்களை திருப்திபடுத்துவதிலிருந்து கிடைத்துவிடுகிறது என்பதுதான் உண்மை.

நேசர்களே! இக்கதையிலிருந்தாவது உண்மையை நீங்கள் உணர்வீர்களா? இறை திருப்திக்கு ஏற்பத்தான் உங்களுக்கு தெய்வ நேசமும், தெய்வீக ஞானமும் உண்டாக முடியும். இல்ஹாம் என்னும் தெய்வீக உதிப்பு இதய பரிசுத்தத்தின் அளவுக்கு உயர்வானதாக இருக்கும். 'அக்லுல் அவ்வல் - தலையாய மதிநுட்பம்' என்ற தானத்திலிருந்துதான் இறைதூதர்கள் 'வஹீ' எனும் தெய்வீக வெளிப்பாட்டை பெறுகிறார்கள். 'நப்ஸுல் குல்லி - சம்பூரணமன வெளி'யிலிருந்து இல்ஹாம் உண்டாகிறது. இல்ஹாம் தெய்வ நேயர் களுக்கு உண்டாகக் கூடியது. 'இல்மல்துன்னீ' என்னும் ஞானம் நபிமார்களுக்கும், வலிமார்களுக்கும் இறைவனால் நேரடியாக உண்டாக்கப்படும் ஞானமாகும்.

வஹியின் வாசலும், இல்ஹாமின் வாசலும் கனவுகளென்ற கதவுகளைக் கொண்டு திறக்கின்றன. நேர்வழி நடப்பவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து உண்டாகும் நற்செய்திக் கனவு 'புஷ்ரு' எனப்படுகிறது. '(இத்தகைய) கனவு நுபுவத்தின் நாற்பத்தி ஆறில் ஒரு பங்கு!'' என்று நபிகள்பிரான் (ஸல்) கூறியுள்ளார்கள். இதில் மூன்று வகையுண்டு. ஒன்று கனவு காண்பவன் இருக்கும் தாணத்தையும், அவனது குணங்களையும் அறிவிப்பதாகும். இரண்டாவது அவனது ஆத்ம நிலையை காட்டும் கனவாகும். மூன்றாவதாக ஞானம் வெளியாகும் கனவாகும். அல்லாஹ்வின் நல்லடியான் ஆத்ம ஞானப் பாதையில் அறிமுகமானதும் அவனுக்கு கனவுலகின் வாசல் திறக்கப் படுகிறது.

'கஷ்பு' என்பது திரை அகலுதல் என்பதாகப் பொருள்படும். இவ்வுலகில் நாம் நமக்கே உரிய ஐம்புலன் அனுபவத்தையே உலகமென்றுக் கருதி வருகிறோம். ஐம்புலன்களில் ஒரு புலனை இழந்துவிட்டவனுடைய அனுபவம் முற்றிலும் வேற்றுமையானது. எனவே புலன்களைக் கொண்டுதான் அவற்றின் உலகும் புலனாக முடியும். உண்மையில் இந்த 'ஆலம் அஜ்சாம்' என்ற சடவுலகை மறைவான உலகங்கள் சூழ்ந்துள்ளன. அவற்றைப் பார்க்கக்கூடிய ஆற்றல் மனிதனுக்கு கிடைக்கவில்லை என்பது தான் குறைப்பாடு. ஆத்மஞான பயிற்சிகளின் மூலம் இந்த குறைபாடு நீங்கி மறைவான உலகம் அடியானின் எதிரில் தோற்றமாகிறது. இதுதான் கஷ்பு என்று சொல்லப்படுவதாகும்.

கஷ்பு ஏற்படுவதற்கேற்ப அவனது அறிவு விசாலப்படுகிறது. நம்பிக்கையும் உறுதிப்படுகிறது. அறிவும், ஞானதிருஷ்டியும் இந்த

அடிப்படையில்தான் உண்டாகிறது. இதற்கு ஒரு எல்லையே கிடையாது. உண்மை யாதெனில் இறைவனின் பரிபூரண உள்ளமையும், அவனது கல்யாணகுணங்களின் விகாசமும் யாராலும் மட்டுப்படுத்த முடியாததா யுள்ளது. நபிமார்களும், வலிமார்களும்கூட இறைவனால் அவரவர் களுக்கு தரப்பட்ட அறிவின் அளவே அறிந்து கொண்டிருக் கிறார்கள். இம்மறைவான புலன் என்பது இதயப் புலனால் ஏற்படுவ தாகும். மனிதனின் உலிலுள்ள புலன்களுக்கும் இதியப் புலன் அல்லது உயிரின் புலன்களுக்குமிடையில் ஒரு தடுப்பு உள்ளது. இந்த தடுப்பு விலகியதும் மறைவான உலகக் காட்சிகள் உண்டாகத் தொடங்குகின்றன. இரட்சகனுடைய ஞானத்தின் பீடமான 'அஃயானே தாபித்தா', விதிவசப்பட்டோலை என்கிற லௌஹுல் மஃபூல், தெய்வீக மதிநுட்பமான 'அக்லுல் அவ்வல்' ஆகியவற்றின் தரிசனமும் ஏற்படுகிறது.

நல்லறிவாளர்களே! தெய்வ நேசம் என்பது அவனைப் பற்றிய அறிவை ஆதாரமாகக் கொண்டதாகும். எனவேதான் எம்பெருமான் (ஸல்) அவர்கள் ''சீனாவில் இருப்பினும் அறிவைத் தேடி அடைந்து கொள்ளுங்கள்'' - என்று கூறியிருக்கிறார்கள். அறிவைப் பொறுத்தது விசுவாசம். விசுவாசத்தைப் பொறுத்தது நேசம். ஷெய்குல் அக்பர் இபுனுல் அரபி (ரலி) அவர்கள், 'மனிதர்கள் ஒவ்வொருவரும் அல்லாஹுத அலாவை வணங்கவில்லை. தங்கள் விசுவாசமாகிய இஃதிகாத்தையே வணக்குகிறார்கள்!' என்று கூறுகிறார்கள். சிந்தித்துப் பாருங்கள் உங்கள் அறிவைப் பயன்படுத்தி இறைவனை அணுகுங்கள். ஆண்டவனை அணுகுவதற்கு சுலபமானப் பாதை அவனை அடைந்தவர் களின் சகவாசத்தை நீங்கள் நாடித் தேடுவது கொண்டுதான்!

''முரீதி இதா மாகான பீசர்கி ஆயிபன் - உயீத்கு இதாஃபில் அர்லி லதப்ஹிம்மத்தி - என்னுடைய முரீது உதயகிரி அல்லது அஸ்தகிரியிலிருந்துக் கொண்டு அவன் துயர் களைய என்னை விளித்தால் நான் அவனுக்கு உதவி, அவற்றை விலக்குவேன்!'' என்று ஞானிகள் நாயகம் முஹியித்தின் ஆண்டகை (ரலி) அவர்கள் கூறும் மொழியைக் கவனித்தீர்களா? வீண் விதண்டாவாதத்தாலும், தற்பெருமை செருக்காலும் இறையடியார்களைக் குறைவு கண்டு கைதேசமடையாதீர்கள். ''எனது அவுலியாக்கள் எனது பரிவட்டத் திற்குள்ளிருப்பவர்கள். என்னைத் தவிர யாரும் அவர்களை அறிய மாட்டார்கள்'' - என்ற ஹதீது குத்ஸியின் தாத்பரியம் பற்றி சிந்திப்பது அவசியமாகும். இன்னும் இமாம் ஸஅதி அவர்கள்

'அவுலியாக்களுடைய முந்தானையைப் பற்றிப் பிடிப்பதில் பயம் வேண்டாம். ஏனெனில் நூஹ் (அலை) அவர்களோடிருக்கையில் வெள்ளத்தைப் பற்றிய அச்சம் எதற்கு?'' என்று வினவுகிறார்கள்.

அல்லாஹ்வின் ஏகத்துவத்தைப் பற்றிய சிந்தனையானது வணக்கங்களுக்கெல்லாம் மேலானது என்று நல்லறிவாளர்கள் கூறியிருக்கிறார்கள். யானையைக் கண்ட குருடர்களைப் போலவே அல்லாஹுவை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். வீடுகளை வானளாவ நிர்மாணிப்பது, உடைகளால் உங்கள் உடலை அலங்கரிப்பதுப் போன்ற உலகக் காரியங்களில் கவனம் செலுத்துவதிலேயே உங்கள் காலம் செலவாகிக் கொண்டிருக்கிறது. உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இம்மயக்கத்தைப் பற்றி என்ன சொல்வது! அல்லாஹ் உங்களை நேர்வழியில் திருப்பினாலன்றி கைசேதமே!

துர்ப்பாக்கியவான்களே! நல்லடியார்களுடைய வாழ்க்கையைப் பற்றியும் அவர்களுடைய குறிக்கோளைப் பற்றியும் நீங்கள் அறிய முடிவதில்லை. உங்களுக்கு அவர்கள் பைத்தியக்காரர்களாக தெரிகிறார்கள். அவர்களோ உங்கள் பைத்தியக்கார எண்ணத்தைப் பற்றி சிரிக்கக்கூட நேரமில்லாமல் அல்லாஹ்வுடைய கவலையில் ஆழ்ந்திருக்கிறார்கள். ஒருநாள் இமாம் ஜஃபர் ஸாதிக் நாயகம் அவர்கள் தங்கள் இல்லத்தின் வாசலில் கவலையோடு அமர்ந்திருந் தார்கள். அந்நேரம் அங்கு வந்த ஒரு சுகவாசி இமாம் அவர்களைப் பார்த்து, ''என்ன அன்பரே! என்றுமில்லாத கவலையுடன் அமர்ந் திருக்கிறீர்! அல்லாஹ், அல்லாஹ் என்று பிதற்றித்திருந்தீர். சொத்து, சுகமெல்லாம் இழந்தீர்! இன்று வெறும் கையராக அமர்ந்துவீட்டார்! இப்போதாவது உமக்கு புத்தி வந்ததா? உமது கவலையைப் பார்த்தால் ஏதோ தெளிவு ஏற்பட்டுவிட்டதுப் போல் தெரிகிறது! இனியாவது அந்த அல்லாஹ்வைவிட்டு உலகைப் பாரும்'' என்று உபதேசிக்கத் துவங்கினார். ஹலரத் அவர்களோ அந்நபரைப் பார்த்துச் சிரித்தார்கள். ''அன்பனே! என் கவலை இன்னதென்பது உமக்குத் தெரியாது. ஆனால் நீ தவறாக கருதிவிடக் கூடாது. நானும் ஒரு நல்ல காலத்தை எதிர்பார்த்துதான் காத்திருக்கிறேன். அந்தக் காலம் எது தெரியுமா? அது மரணம் என்னும் வசலுக்கு அப்பாலுள்ளது. மரணப் பாதையில் நடந்து இறைவனின் அருகில் நிரந்தரமாகிவிடும் நாள் அது!'' என்றார்கள். அந்நபர் வாயடைத்துப் போனார்.

உலகக் கவலையிலேயே மூழ்கிக் கிடக்கும் உங்கள் பேதமையை என்னென்பேன்! உலகையும் வென்று, மறுமையிலும் முடிசூடிக் கொள்ளலாம் என்று கனவு கண்டுக் கொண்டிருக்கிறீர்கள். அது ஒருகாலும் முடியாது. சத் முயற்சியின்றி வெளிப்படையான வணக்கங்களைப் பெருமையுடன் எடுத்து நடத்திக் கொண்டு சுகண்டிகளாகத் திரியும் உங்களுக்கு ஆத்ம சுகமும், ஜெயமும் கிடைக்காது. "மறுமையில் ஜெயம் பெறுபவர்கள் ஃபக்கீர்களே! ஏனெனில் அவர்கள் மறுமையைத் தேர்ந்துக் கொண்டு இம்மையைப் புறக்கணித்து விட்டார்கள்" - என்று இறை தூதர் ஈஸா (அலை) அவர்கள் கூறுகிறார்கள். என்னே உங்கள் பேதமை! "அவனுடைய இஷ்கில், துக்கத்தின் மலையை என் தலைமிது சுமந்தேன். அது என்ன ஆனாலுமாகட்டும். வாழ்க்கையில் எல்லா விதமான சுகத்தையும் விட்டுவிட்டேன். அது என்ன ஆனாலும் ஆகட்டும்!" என்றொரு சூஃபி கவிஞர் பாடுகிறார், நீங்களோ உங்கள் தலைமீது இந்தப் பாழ் உலகை சுமந்துகொண்டு திரிகிறீர்கள்.

இருப்பதென்பதெல்லாம் ஒரே பரம்பொருள்தான். எல்லாம் ஒரே ஜீவனின் தொடர் ஓட்டமின்றி வேறில்லை. அல்லாஹ் ஒருவன்தான் ஜீவிதமுடையவன். மற்ற அனைத்தும் அவனது ஸிஃபத்துகளே! இப்பிரபஞ்சம் முழுமையும் அவனது ஸிஃபத்துகளின் வெளிப்பாடே. ஒருமை என்பதே உண்மை. பன்மையாகக் காணும் காட்சிகளெல்லாம் வெறும் தோற்றங்களே. எம்பெருமான் முஹம்மத் (ஸல்) அவர்கள் இரு நிலையுடையவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய ஒரு நிலை யதார்த்தம். மற்றொன்று கற்பனையுமாகும். அவர்களுடைய யதார்த்த நிலையில் சார்ந்திருந்த போதுதான், "அன அஹ்மதுன் பிலாமீம்' - நான் மீமில்லாத அஹ்மதாவேன்" என்றார்கள். கற்பனை நிலையில் இருந்தவாறு "அப்துஹூ வரஸூலுஹூ" - அல்லாஹ்வின் அடிமையும், ரஸூலுமாவேன், என்று பகர்ந்தார்கள். அவர்களே இருநிலைகளையும் வரையறுக்கும் பர்ஜக் எனும் வரைகோடாவார்கள்.

பரமதாத்தில் ஃபனா நிலையடைந்தவர்கள் யதார்த்தத்தை உணர்ந்துக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலையிலிருந்த போதுதான் ஹலரத் மன்சூர் ஹல்லாஜ் அவர்கள், "அனல்ஹக் - நானே சத்தியம்" என்று சப்தமிட்டார்கள். அவர்களை பொருத்த வரை அவர்கள் கூறியது சரியே. ஆனால் போலி சூஃபிகள் சிலர், "எல்லாம் அவனே - நீயும் அவனே! வணக்கவழிபாடுகள் தேவையில்லை!" என்று உபதேசித்துக் கேடு விளைவித்துவிடுகிறார்கள்.

உண்மையை உணர்ந்து ஏகத்தில் தரிப்படாத நிலையில்தானே மெய்ப்பொருள் என்று கருதுவோர் பிர்அவுன் போன்று அழிவுக்கு ஆளாக நேரிடும்.

ஹே நல்லறிவாளர்களே! உண்மையையும் பொய்யையும் பிரித்தறிவிக்கும் பொருட்டு அல்லாஹ் என்னை ஹிந்துஸ்தானத்தில் தோன்றச் செய்துள்ளான். என்னுடைய இக்கரத்தை மஹ்பூப் சுப்ஹானியின் கரமாகவும், என் மரணத்துக்குப்பின் என் அடக்கத் தலத்தை ஆண்டகையின் அடக்கத்தலமாகவும் கண்டு கொள்பவர்கள் நிச்சயமாக வெற்றிபெறுவார்கள். தரீக்காக்கள் அனைத்துக்குள் நம் ஆண்டகை அவர்கள் கொலு மண்டபமாக இருப்பதுபோல தரீகாக்கள் அனைத்தும் சங்கமிக்கும் குளிர்ந்த பூங்காவாக நான் உள்ளேன். குத்பியத் என்னும் இறைநாயகத் தன்மையின் வெளிப்படையான தோற்றம் என்னோடு சம்பூரணம் பெற்றுவிட்டது.

குழப்பவாதிகளே! உங்களது குழப்பங்களை வெளியில் வைத்துவிட்டு என்னிடத்தில் வாருங்கள். மனிதர்களைப் புனிதர்களாக மாற்றும் 'கீமியா' என்னும் ரசவாத வித்தை என்னிடமுள்ளது. அல்லாஹ்வின் சன்னிதானத்தில் நீங்கள் ஜெயமடையும் பொருட்டு என் வார்த்தைகளை நம்புங்கள்.

ஆதியும், அந்தமும், அண்டமும், அணுவுமாக வியாபித்து நிற்கும் பராபரனாகிய அல்லாஹ் ஜல்ஜலாஹூவின் நட்பைத் தவிர வேறு உயர்வு உங்களுக்கு என்ன வேண்டும்? என்னே கைசேதம்! இந்த யதார்த்த உண்மை உங்களுக்கு விளங்கவில்லையா? ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் இமாம் கஸ்ஸாலி (ரலி) அவர்கள் உலகம் வியக்கும் அறிஞராகப் போற்றப்பட்டு வந்தார்கள். பக்தாதியப் பேரரசு அவர்களை சிறப்புமிக்க மார்க்கப் போதகராக போற்றி வந்தது. நிஜாமியா கல்லூரியில் உயர்பீடம் தரப்பட்டிருந்த அவர்கள் ஒருநாள் அப்பல்கலைக்கழக கதவுகளைத் திறந்துக்கொண்டு அறிஞரென்னும் பட்டங்களையும் உதறிவட்டு வனாந்தரங்களை நோக்கி நடந்து விட்டார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட மனமாற்றத்துக்குக் காரணம் என்ன தெரியுமா? மெய்ப்பொருளை உணராதவரை அல்லாஹ்வின் நல்லருளைப் பெற முடியாதென்ற கவலை ஏற்பட்டதுதான்.

★★★